உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

பன்னிருகாண்ட

வைத்தியம் 200.

மதுரை யானைக்கல் தெரு
வித்வான்
குழந்தை வேலுப் பிள்ளை யவர்கள்
ஏட்டுப்பிரதியின் படி

மதுரை, பிராட்டிபத்துக் கிராமம்
வீ. நடராஜ பிள்ளை யவர்கள்
சரிபார்த்து,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்,
இ. ரா. ம.
குருசாமிக் கோனார்
அவர்களாற்றமது
மதுரை
வடக்கு மாசிவீதி
ஸ்ரீ, இராமச்சத்திரவிலாச அச்சியந்திர
சாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

1927

இதன்விலை] ரூ-5——— [[redacted]

உ

பராமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

பன்னிருகாண்ட வைத்தியம் 200.

முதலாவது வைத்திய காண்டம் - 16

ஆடினதோர் மூல கணபதியைப் போற்றி
ஆதியென்ற சொற் சூஸ்திரம் பதினாறுக
பாடினேன் பூரணம் பன்னிரு நூறுக்கு
பரிவான சூஸ்திரமாய் ரத்தினம்போல்
தேடியே பன்னிரண்டு காண்டங் காண்டம்
சேரகப்பாடியதோ ரின்னூலப்பா
நாடியே யுலகோர்க்காய்ச்சொன்ன வாக்யம்
நன்றான மூலகணபதி காப்பாமே. (1)

மூலமுத லடிமுடியும் நடுவரையு மப்பா
முத்தாக உகந்த தொரு சாயுட்சந்தான்
மூல முதலென்றதுதான் மால் தேவியாகும்
முடியுமுத லடிமுடியுந் துருசு வீரம்
ஞாலமுதல் நடுவணையுங் கெவுரி லிங்கம்
நலமான சாயுட்ச்யம் வெள்ளையாகும்
பாலமுதம் வேதைதனை அய்யா அய்யா
பார்த்தறிந்து கைபாக மாகச்செய்யே (2)

செய்யப்பா ஏகமூலிகையைமுன்னே
செயமாகச் செய்து கொண்டு துருசிற்போடு
வைபப்பா துருசுடனே வீரஞ்சேரு
வகையாக கரிசாலைச் சாற்றிற் போடு
மெய்யப்பா குகைதனிலே சூதம்விட்டு
வேண்டியே குருபோடு மணிபோலாகும்
செய்யப்பா இதன்விபரம் நூற்றுக்குள்ளே
திறமாகச் சொல்லி விட்டேன் தெரிந்துபாரே (3)

பாருநீ மால்தேவி களங்கு தன்னைப்
பாடிவிட்டேன் வைத்தியம் ஐம்பதனுக்குள்ளே
காருநீ களங்குதனை வெள்ளி செம்பில்
கட்டாகக் கொடுத்திடவே கடைக்கியேறும்
வீருடனே சொல்லுகிறேன் நூற்றுக்குள்ளே
விபரமாய்ச் சொல்லிவிட்டேன் முன் பின்னாக
சாரேநீ சாரணைதான் துருசு வீரம்
சார்வாக மால்தேவி களங்குமாச்சே (4)

ஆச்சென்று சொல்லாதே யின்னுங்கேளு
அடைவான கெவுரி லிங்கம் கருவங்கந்தான்
பாச்சென்ற நூற்றுக்குள் விபரமாகப்
பாடிவிட்டேன் சுத்திமுதல் கட்டுஞ்சொன்னேன்
தோச்சென்ற செயநீரு சுருக்காய்ச் சொன்னேன்
சுகமாக உட்கருவின் போக்குஞ் சொல்னேன்
நாட்சென்று பாராதே குருமுடித்துப்பாரு
நன்றான குருவறிந்து நான் சொன்னேனே (5)

சொன்னதொரு கேசரியின் சூஸ்திரந்தான்
சொல்லி விட்டேன் நூற்றுக்குள் நன்றாய்ப்பாரு
வன்னமுள்ள வீரமுடன் வெள்ளை சேர்த்து
வாகாகக் களங்கமதாய்ச் செய்து கொண்டு
பன்னமுள்ள களங்குதனைச் செம்பி லிட்டால்
பாங்காகு மதுவயது இருபத்தைந்தாம்
சொன்னதுவும் பொய்யல்ல மெய்தானப்பா
சூஸ்திரத்தின் படிசெய்தால் மெய்யதாமே (6)

மெய்யதாய்க் கைபாகஞ் செய்பாகங்கள்
விடாமலே செய்தவர்க்கு மெய்யதாகும்
பொய்யதாங் கைபாகஞ் செய்பாகங்கள்
போக்கிவிட்ட பேய்களுக்குப் பொய்யதாகும்
மெய்யதாங் கைபாக செய் பாகங்கள்
விபரமது சொல்லுகிறே னுகந்துகேளு
கையதாம் நித்தியகர்ம முடிந்துதானால்
கரையில்லை வேதையது கைக்குள்ளாமே (7)

ஆமப்பா கரலியாக மங்கன் நியாசம்
அடைவாகச் சித்தாந்த பீஜங்கொண்டு
வேமப்பா செய்துவர உதவியாகும்
வேறொன்றைச் செய்தாக்கா லுறுதியில்லை
நாமப்பா வெட்ட வெளியாகச் சொன்னேன்
நலமான சூஸ்திரமது அஞ்சிற்றூவும்
காமப்பா லாசைகொண்டால் வாதம்போச்சு
கட்டாக பீஜமது அஞ்சில்காணே (8)

அஞ்சிலேதான் கைபாகக் குருவுஞ் சொன்னேன்
ஆறிலுந்தான் முடிவாகப் பாடிப்போட்டேன்
நெஞ்சிலே படும்படியாய்க் குருமுடிப்பு
நேராக நூற்றிலே விபாஞ் சொன்னேன்
விஞ்சிலே தலைக்குருவா மேசமூலி
வீறான வயித்திபமைம் பதிலே சொன்னேன்
நஞ்சு கொண்டு செத்தவன்போல் சரக்கெல்லாஞ்சாம்
நாதாக்களுக் குரைத்த குருவிதாமே (9)

குருவாக முதற்குருவை வழியாய்ச்செய்து
கொடுத்து வந்த பேர்களுக்கு வேதைகாணும்
மருவியே போகத்தி லிருந்த பேர்க்கு
வழிதுறைக ளறியார்கள் மடையரப்பா
கருவாக நவச்சாரங் கரியுப்புந்தான்
கட்டாக நூற்றிலேதான் கருவைச் சொன்னேன்
அறிவாகச் செய்தவற்கு குருவேயாகும்
ஐம்பதிலே முப்பூவை முடிக்கச் சொன்னேன் (10)

சொன்ன தொரு ஐங்கோலத் தைலஞ் சொன்னேன்
சுகமாக அறிந்தவர்க்கு முப்பூவாகும்
வன்னமுள்ள வாதமாம் வேதைகாணும்
மாத்தாகும் பசும்பொன்னு மேனியெல்லாம்
கன்னமுடன் கனக மிகுஞ் செல்வமாகும்
காசினியில் நீயு மொரு சித்தனுவாய்
நன்னயமா யின்னூலைக் கொடாதே நீதான்
நானென்ற கெருவம் வைத்தால் நாகில்வீழ்வாய் (11)

விழுகாதே யொருவருக்கும் நூல்கொடாதே
வேதாந்த ஞானியென்று லீவாயப்பா
பழுவாகு மிந்தநூல் துறை காண்பிக்கும்
பாடினேன் பதினாறுய்ச் சுருக்கிக் கொண்டு
கழுவாதே யிந்தநூல் விட்டிடாதே
நன்றான குருமுடிப்புச்சுண்ணம் நூறு
எளிதாக வயித்திய மைம்பதுக்குந் தானே
இந்தநூல் கருக்குருவாய்ப் பாடினேனே (12)

பாடினேன் ஐம்பதிலே முதற்குருவையப்பா
பகர்ந்திட்டேன் கருமறைப்பில்லாமற் சொல்லி
ஆடினேன் சர்வத்தால் குருசூட்சத்தை
அடிமுடியும் நடுவரையி லமர்ந்திட்டேனான்
தேடினேன் ஏகமூலிகையைக் காணச்
செப்பினு ளாத்தாளும் தெளிந்துகொண்டு
நாடினேன் பொதிகை மகாமேரிற் சென்றேன்
நாதாக்கள் கடாட்சத்தால் தேடினேனே (13)

ஏகமூலிகை.

தேடினேன் ஏகமூலிகையின் திட்டம்
திறமான பூச்சுண்ணம் அஞ்சதாகும்
தேடினேன் பாஷாணம் பதினொன்றுந் தான்
திடமான பூக்கண்ட மிடைக்குச் சேர்த்து
ஆடியே வில்லைதட்டிக் காயப்போடு
அதன்பின்பு மணலிலிட்டு பெரிசாமந்தான்
சூடினேன் செந்தூரங் குப்பிக்கேற்றிச்
சுருக்காகும் ஐம்பதிலே வகையைக்காணே (14)

காணப்பா ஐம்பதிலே அடிமுடியின் விபரம்
கட்டாக நடுவரையும் நூற்றுக் குள்ளே
பூணப்பா தைலங்கள் மூலிச்சாறு
புகழாகச் சுருக்கிடவே யெல்லாந்தேரும்
தோணப்பா செந்தூரங் குன்றி கூட்டிச்
சுருக்கிடவே சரக்கெல்லா மணிபோலாடும்
காணப்பா அம்புபோல் வேதைபாயும்
நன்றாகக் குருமுடிப்பு நூற்றிற்காணே (15)

காணேதான்குருமுடிப்பு நூற்றிற் சொன்னேன்
கருவதுதான் ஐம்பதிலே திறந்தேனப்பா
பூணேதானிந்தநூல் துறைகாண்பிக்கும்
பூட்டியதோர் பூட்டெல்லாமஞ்சிற் காணும்
தோணவே கருக்குருவும் வழிதுறையுமாகும்
தொடுத்திட்ட செகவேதை வழியேபாரு
பேணவே பதினாறு யிதுவேயாகும்
பெலமான முதற்காண்டம் பதினாறுமுற்றே (16)

முதற் காண்டம்

முற்றிற்று.

இந்த முதற்காண்டத்தில் வைத்தியத்திற்குக் குருவும், மருந்துகள்செய்யு முறைகளும் சொல்லி யிருக்கிறது. இனி இரண்டாவது காண்டமும் அதன் கருக்குருவுஞ் சொல்லுவது காண்க.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிருகாண்ட

வைத்தியம்.

இரண்டாவது வாதகாண்டம் 16

முத்திபெற்றவைத்தியற்கு மோட்சமெய்தும்
மூலமென்ற ரசவாத மிரண்டாங்காண்டம்
சத்தியமாய்ச் சொல்லச் சுந்தாமே சேளு
தாரணியிற் சொன்னார்கள் முதற்சாதி யென்று
சித்தர்கட்கு கிட்டுமடா மற்றோர்க்கில்லை
செசப்பி யென்ற சாதியெல்லா மாகுமாகும்
குத்தமில்லை உவற்படாச்சனிகை தன்னை
குணமான முதற்சாதி யென்னலாமே (1)

என்னலாமது கிடைத்தால் மெத்தநன்று
இயல்பாகச் சிசுவாரினி நன்று நன்று
வன்ன முள்ளஜாதி பதினெட்டு தன்னில்
வகைபிரிவு செய்யாமல் நீதம்வாங்கி
திண்ணமுடன் பீங்கானில் கூடன் சேர்த்து
தீரமுடன்செய்குவாய் செயநீராகும்
உண்ணலாஞ் செயநீரில் துருசுதன்னை
உடன்துவைத்து ரவிதனிலே வைத்திடாயே (2)

வைத்தவுடன் சுண்ணாம்பாய் நீறிப்போகும்
மைந்தனே கொடிய சுண்ண வகையைக்கேளு
சித்தான ரூபியப்பா துருசுச்சுண்ணம்
தேனான மனோன்மணியாள் சுரோணிதந்தான்
வித்தையிலே ரசவித்தை யிதுதானப்பா
வெகுகோடி சித்தரெல்லா மறைத்து வைத்தார்
கொத்தோடே ரசத்தைநீ கொல்லவென்றால்
குணமான களஞ்சிக்கு பஞ்சாடிதாக்கே (3)

தாக்கிடவே ரசஞ்செத்துச் சிவமணியு மாச்சு
தனியானரச மணியைக் களஞ்சி செம்பில்
தாக்கிடவே வயதேழு கன்னியாளுள்
தனிவெள்ளி யீயத்தில் பத்துக்கொன்று
தாக்கிடவே சத்தைநீ பூசைபண்ணி
தாயுடைய செயநீரி லரைத்துப்பூசி
தாக்கிடவே காடை.யொரு புடத்தில் போட
தளதளெனச் செந்தூர முருக்கம்பூவே (4)

பூவான செந்தூரம் நவலோகத்தில்
பூட்டிபே செந்தூரம் வயதீரெட்டாம்
பூவானதென்றுலு மிதுதானப்பா
பொற்கொடியாள் பூவாகும் மூப்புவாகும்
பூவென்றுல் பூநீரை அறிந்தோமென்று
பொன்னுன சரக்கெல்லாஞ் சுட்டுக்கெட்டார்
பூவான சுரோணிதமுஞ் செய நீரென்று
பூமியிலே அறியாமற் போனுர்தானே (5)

போனுரே சித்தரெல்லாம் பூவையுண்டு
பூண்டிருந்த பிர்மலபி கிடைத்துக்கொண்டு
காணுத சிவன்பாதங் கண்டு கொண்டு
கற்பமிது கண்டவர்கள் உண்டுதேறி
கோணுத சரீரத்தைப் பிலத்துக் கொண்டார்
குருவென்ற பரைநாதந்தன்னுலப்பா
வீணல்லோ மற்றதெல்லாஞ் சாஸ்திரம் பார்த்து
வெரும்பிலுக்காய்ப் பேசியவர் மாய்ந்தார்தானே (6)

தானென்ற கருவங்கஞ் சுத்திபண்ணி
தனியென்ற களஞ்சிக்கு மஞ்சாடி சுண்ணம்
தேனென்ற மனோன்மணியாள் கெந்திதன்னைத்
திறமாகச்சேர்த்தரை பொற்கையான்சாற்ருல்
மேனென்றே வொருசாம மரைத்து நீயும்
வில்லைதட்டிக் காயவைத்துத் தங்கம் கூட்டி
வேனென்ற காடையொரு புடத்தைப் போடு
வெந்து சிவசெந்தூர மாகும்பாரே (7)

பாரப்பா செந்தூரஞ் செம்பிலீய
பத்தரையுந் தப்பாது இன்னங்கேளு
காரப்பா நாகத்தைச் சுத்திபண்ணி
கைமுறையாய்க் களஞ்சிக்கு மஞ்சாடிசுண்ணம்
சீரப்பா நாகமிடை தங்கங்கூட்டிச்
சேர்த்துநீ கெந்தி தனைச்சரியாய்த்தாக்கு
வாரப்பா பொற்றலையின் சாற்றலாட்டி
வகையாறு சாமமது ஆட்டிவாங்கே (8)

வாங்கியேவில்லைதட்டிக் காயவைத்து
வளர்கோழிப்புடமிடச் செந்தூரமாகும்
தாங்கியேசெம்பிலிட வயதுபத்தாம்
தனித்தனியேநவலோகம் வயதோமெத்த
ஏங்காமல்விராலியிலை பறித்துவந்து
இடிக்கையிலேசுண்ணமது மஞ்சாடியிட்டு
ஓங்கியேயிடித்துச் சார்பிழிந்துகொண்டு
உத்தமனேலிங்கத்திற் சுருக்குத்தாக்கே. (9)

சுருக்கான லிங்கமது மெழுகுமாகும்
சுத்திசெய்த நவலோக பாஷாண மெல்லாம்
இருக்கான மெழுகாகும் வேதைகோடி
இயல்பாய்ப் பாஷாண செந்தூரமாகும்
தருக்கான வீரமது மெழுகுமாகும்
தாளகமுஞ் செந்தூரந் தானேயாகும்
மறைக்கவில்லை யிந்தவித்தை யப்பாஅப்பா
வகையாக இதன்பெருமை இன்னங்கேளே (10)

இன்னந்தான் பொற்றலையின் கையான்சாற்றில்
இணங்கிவருஞ் சுண்ணமது களஞ்சிதாக்கி
நன்னயமாய்ப் பிழிந்துவைத்து இருப்புச்சட்டி
நன்றானசூத மொருபலத்தைக் கொட்டி
மின்னயமா யடுப்பேற்றித் தீயைமூட்டி
விளக்குப்போ லெரியிட்டுச் சுருக்குத்தாக்கு
சொன்ன தொருசூதமது கட்டிப்போகும்
அடியுள்ள சாரணையும் நன்றாய்த்தீரே (11)

தீரப்பா கெவுனமணி யிதுதான்வித்தை
தேசமெல்லாஞ் சுற்றிவரக் கெவுனமோடும்
காரப்பா வெள்ளீயம் நீரைவாங்கும்
கணங்கோடி மணிவசியங் கோடாகோடி
பாரப்பா வெடிகுண்டு குத்துவெட்டு
பரிவாக விலக்கிவிடு மணியினாலே
ஆரப்பா சிவமாலை யிதுதான்மெத்த
ஆச்சரிய மணிவித்தை யின்னஞ் சொல்வேன் (12)

சொல்லுவேன் துத்தியிலை பறித்திடித்துச்
சுண்ணம்விட்டுச் சார்பிழிந்து கரியுப்பிட்டு
செல்வமுடன் மூன்றுநா ளரைத்துவாங்கி
சீராக வில்லைதட்டிக் காயவைத்து
வல்லபமாய் முழப்புடத்திற் சுண்ணமாகும்
வயிரவனைப் பூஜைபண்ணிச் செம்பிலீய
நல்லவனே வயதாறு வாலைபிள்ளை
நன்றான வாயுவெல்லா மற்றுப்போமே (13)

வாயுவெல்லா மற்றுதடா அரைபொடியிற் சுண்ணம்
மஞ்சாடி களஞ்சிக்குக் கெந்தியாறும்
காயான முருக்கம்பூ களஞ்சி கூட்டிக்
காரமிட்டு உருக்கிடவே களங்கமாகும்
ஆயாசமில்லையடா போகநாதன்
அறிந்துதான் சுரோணிதத்திற் செய்தாரப்பா
நாயன்மா ரிதையறிந்தார் மூன்பின்னாக
நானறிந்து வாதத்தின் முறைசொன்னேனே (14)

சொன்னதொரு வெள்ளை நீர்முள்ளிச்சாற்றிற்
சுண்ணமது கால் களஞ்சி யிட்டுவாங்கி
பின்னமில்லா வெள்ளீயம் உருக்கிச்சாய்த்துப்
பிசகாமல் சுருக்கிடவே வெள்ளியாகும்
உண்ணானே முள்ளியது சுருக்குமெத்த
உத்தமனே தைவேளை சிவந்தவேளை
பெண்ணார்தம் ஊமத்தம் ரெண்டுசாற்றில்
பேர்சுண்ணமிட ரசமு மணியுமாமே (15)

மணியான ரசவித்தை சுருக்குமெத்த
வண்டருக்கும் கசடருக்கு மியம்பவேண்டாம்
கெணியான கோவை நூற்றிருபத் தைந்தில்
கீர்த்திபெற வைத்தியங்கள் சொல்லிவிட்டேன்
அணிவார்கள் சிவசத்தி பூஜைதன்னை
அன்புடையோர் செய்வார்கள் பெரியோராவார்
துணிகரமாய்ச் செய்தோனே சித்தன்சித்தன்
சூஸ்திரந்தான் ரசவாத காண்டமுற்றே (16)

இரண்டாவது காண்டம்

முற்றிற்று.

இந்த இரண்டாங் காண்டத்தில் வாதாங்க முறைகளைச் சொல்லப்பெற்றது இனி, மூன்றாவதுகாண்டத்திற் சுண்ணமுறைகள் சொல்லுவதுகாண்க.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிரு காண்ட

வைத்தியம்.

மூன்றுவது சுண்ணக் காண்டம் - 16

ஆதியந்தம் நடுவான சோதிபாதம்
அனுதினமும் நெஞ்சில்வைத்துத்துதித்துப் போற்றி
சோதிமய மானதொரு துரியம்பார்த்துத்
துரியமதிலாடுகின்ற சிவனேபோற்றி
நீதியாய்நின்ற தொரு மாலேபோற்றி
நேரான அண்டபிண்டத் தருளேபோற்றி
சோதியாம் விந்துவிலே துலங்கும் நாதம்
துரியவெளியடி யெனவே தொழுதிட்டேனே (1)

தொழுதிட்ட பதிகேளு சொல்வேனப்பா
துரியாதீதங் கடந்து துரியம்பாரு
வழுதிட்ட பொன்னிறமாய்க் காணுங் காணும்
வடிவான மாரனங்கே நிர்த்தமாகும்
முழுதிட்ட மூலத்தின் மேலேயப்பா
முதிர்ந்து நின்ற குசவனுட வீட்டைப்பாரு
அழுதிட்டாலாவ தென்ன மாடேசொல்லு
அப்பதியை யறிந்துநிற்கக் கருவைக்கேளே (2)

கருவேது உருவேது வென்பார் மாந்தர்
கண்டுபதி தெரிசிக்காக் கசடனுகும்
உருவேது வென்றுக்கால் உபயகாதம்
உன்னுடம்பி லுற்றுப்பார் வேறேயுண்டோ
தருவேது இதைவிட்டால் பொருள்தானேது
தாரணியில் ஞான முதல்யோகமேது
உருவேது சம்சார உருவதாகும்
உற்றுப்பார் பிறவிபிணி யொழிந்துபோமே (3)

போமப்பா யிப்பதியின் கூறுகண்டு
    போக்கோடே திறமறிந்து வசிவுவாங்கு
நாமப்பா இதுவாலே வகுத்ததாகும்
    நலமாக வகுத்துவைத்தோன் குசவனாகும்
ஆமப்பா குரு விரண்டு மிதுவேயாதி
    அன்பான மனக்கோல மிருநூறும்பாரு
வேமப்பா வேகாத தலையுமாதி
    விளங்கிநின்ற சாகாத காலுமாமே (4)

சாகாத காலதுவே அருகோணந்தான்
    தனில்வேகாத் தலையதுவே மூலமாகும்
போகாத புனலதுவே பரவெளியதாகும்
    போக்கோடே சொல்லிவிட்டேன் சுண்ணம்நூற்றில்
ஏகாத பிர்மகற்பங் கல்லுச் சுண்ணம்
    இதுவுடைய கூறின்றி வேறொன்றில்லை
வேகாமல் வெந்துநின்ற சவுக்காரந்தான்
    விளங்கியதோர் மாலாகும் விந்துபாரே (5)

விந்துநின்ற நிலைகண்டு நாதங்கண்டு
    வெளிகாணப் பிர்மமென்ற கல்லைக்கண்டு
விந்துநின்ற நிலையதுதான் பேயாகேளு
    வெருவாயை மெல்வதுபோற் சுடாதேநீதான்
வந்தவிதம் போனவிதம் ரெண்டுங் கண்டால்
    மகத்தான சுண்ணக்கல் வெளியதாகும்
வெந்துநின்ற சவுக்காரக் கட்டியோடே
    மேவியே அருகிருக்கும் வெள்ளைக்கல்லே (6)

கல்லென்ற சுண்ணக்கல் காரமெத்தக்
    கடுவெள்ளையாய்ப் பார்த்து வாங்கிவந்து
சொல்லென்ற ரவியினுப்புச் சுண்ணம்நீரு
    சுகமான அமுரிபடி யெட்டுள் போட்டு
மல்லென்று கரைந்து அதைத் தெளியவைத்து
    மகத்தான தெளிவிருத்துப் பாண்டத்திட்டு
நில்லென்ற கல்லுப்பைப் பாண்டத்திட்டு
    நேராக எரித்திடுவாய் சாமம்நாலே (7)

நாலான சாமந்தா னெரித்தெடுத்து
நலமாக ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு
சேலானகாத வுப்பு அதனிற்பாதி
செப்பரிய செயவீரம் நாலுக்கொன்று
மாலான நடுவென்ற சீனக்காரம்
மாட்டதிலே பெட்டிலொன்று மாட்டிக்கொண்டு
மேலான குளிக்கல்லில் போட்டுக்கொண்டு
விரவியே வெண்கருவாற் சாமமாட்டே (8)

சாமந்தா னரைத்தபின்பு வில்லைதட்டிச்
சாதகமாய் ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு
ஏமந்தா னுச்சுதப்பா யிந்தவில்லை
எடுத்ததொரு ஓட்டிலிந்த வில்லைவைத்து
ஓமந்தா னூறெருவிற் புடத்தைப்போடு
உத்தமனே புடமாறி யெடுத்துக்கொண்டு
வாமந்தான் வெடியுப்பு நீரினாலே
மாட்டியே நீயரைத்து வில்லைசெய்யே (9)

வில்லைசெய்து சீலைமண்ணுஞ் சுற்றிக் கொண்டு
வேண்டியதோ ரைம்ப தெருக்குள்ளேபோடு
தொல்லையிலே விழுகாதே தொழிலைப்பாரு
சூடாறி யெடுத்துமே கல்வத்திட்டு
எல்லையிலே பூநீருநவச்சாரந்தான்
ஏற்றியரை நால்சாம மெடுத்துப்பின்பு
வல்லையிலே பனிமுகத்தில் நீருமுண்டாம்
மாட்டியரை கல்லுப்பு மாண்டவாறே (10)

மாறாக எடுத்ததனை வில்லைசெய்து
மைந்தனே குக்குடத்திற் புடமேபோடு
பேறாக ஆறவிட்டு எடுத்துக்கொண்டு
பேசாதே பூநீரைவிட்டு ஆட்டு
நேறாகச் சாம மட்டு மாட்டித்தீரு
நிலைத்ததொரு வில்லையைத்தான் ரவியிற்போடு
கூறாக ஒட்டில் வைத்துப் பூநீர்ச்சீலை
கொளுத்தியே ஐம்பதெருக் குள்ளேபோடே (11)

போட்டுவைக்கச் சுண்ணமதாய் நீறிப்போச்சு
புகழாக எடுத்ததனைக் கல்வத்திட்டு
ஆட்டிடவே கடுங்கார நீரைவிட்டு
அப்பனே ஆட்டியெடு சாமமொன்று
நீட்டவே அஞ்சுசுண்ணக் குகையில் வைத்து
நேராகப் பூநீராற் சீலைசெய்து
மூட்டவே ரவிக்குள்ளே காயவிட்டு
மூசியாம லோட்டில் வைத்து ஊதிப்போடே (12)

போட்டிட்டவே சுண்ணமென்ற வழலையாச்சு
பொற்பிறவி யுண்டாச்சு பொருளுமாச்சு
நீட்டிடவே அண்டரண்டம் நீறிப்போச்சு
நிலையாத வாதமப்பா நிலைக்கலாச்சு
காட்டிடவே சனிகையுட நாதத்தாலே
கல்லுப்புச் சுண்ணமதாய்க் கருவுமாச்சு
கூட்டயிதன் துறையறிந்து செய்கிட்டாக்கால்
குறையாத வாதவித்தை வேதைதானே (13)

தானென்ற கற்சுண்ணம் பலந்தான் ரெண்டு
தன்மையுள்ள செயசாரம் பலந்தான் ரெண்டு
ஊனென்ற பூரமொன்று கூட்டிக்கொண்டு
உத்தமனே கல்வத்தி லிட்டுஆட்டில்
வேனென்றே யிளகியது குழம்பாய் நிற்கும்
மெதுவான பீங்கானி லிட்டுக்கொண்டு
வானென்ற பனிமுகத்திலிருக்கத் தண்ணீர்
மைந்தனே வீரமதிற் காசுபோட்டே (14)

போட்ட பின்பு செயநீர்தான் வழலையப்பா
புதுமையுள்ள கல்லுப்பை நீராலாட்டி
நாட்டுடைய வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
நல்லதொரு அஞ்சுசுண்ணக் குகையிலூது
மூட்டுடைய சுண்ணும்பாம் வீரங்கூட்டி
முக்கியமுள்ள வாய்நீரால் மத்தித்தேதான்
தாட்டிகமாய்ச் சூடனுக்கு அங்கிபூட்டித்
தடையறவே மூன்றுநாள் காயவைத்துக்
கூட்டியே அஞ்சுசுண்ணக் குகையிலூது
கூச்சமில்லை சுண்ணும்பாய்ப் போகுந்தானே (15)

தானென்ற பூநீரைச் செயநீர்பண்ணி
　　தடையறவே சரக்கெல்லாங் கட்டிக்கொண்டு
ஊனென்ற உடலைவிட்டு வெளியே பார்த்து
　　ஓயிடிந்து போகாதே உரித்தாய்ச் சொன்னேன்
தேனென்ற மனோன்மணியே பூரணந்தானாகும்
　　சிவனொடுங்கும் பாராபரமே கருவதாகும்
நானென்ற அகம்பிடித்தால் தலைதெறித்துப்போம்
　　நல்லசுண்ணம் மூன்றாங் காண்டந்தான் முற்றே (16)

மூன்றுவது காண்டம்

முற்றிற்று.

இந்த மூன்றாங் காண்டத்தில் சுண்ணக்காண்ட முறைகளைச் சொல்லப் பெற்றது. இனி, நான்காவது காண்டத்தில் செந்தூர முறைகள் சொல்லுவது காண்க.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிருகாண்ட

வைத்தியம்.

நான்காவது செந்தூர காண்டம் - 16

ஞானமுத்தி பெந்தனுக்கு உபதேசித்த
நந்தீசர் திருவருளால் நவிலக்கேளு
மானமுத்தி செந்தூரம் வைத்தியமாகும்
வண்டருக்கும் திருடருக்கும் வெளிவிடாதே
ஈனமுற்ற சண்டாளர்க்கிய வேண்டாம்
இன்பமுட னின்னூல் மேலிச்சைவைத்து
தானமுற்றுத் தொண்டுசெய்வோர் தனக்கீய்ந்தால்
தர்மமுண்டுகர்மமில்லை சாற்றக்கேளே (1)

அயச் செந்தூரம்.

சாற்றக்கேள் அயலோகச் செந்தூரத்தைத்
தான்கேளு அரபொடியைப் பலந்தான் வாங்கி
மாற்றில்லா நெத்தான தேங்காய் நெய்யில்
மண்டலம் வைத்திருந் தெடுத்தால் சுத்தியாச்சு
நாற்றமுட னூறலும்போம் கருப்புமாகும்
நன்றான அரபொடிக்கிச் சரியாய்க்கெந்தி
போற்றரியப் பழச்சாற்று லரைத்துவாங்கி
புதுச்சட்டி தன்னில்வைத்து ஓடுமூடே (2)

தாம்பூரச் செந்தூரம்.

மூடியே சீலைசெய்து சாமம்நாலு
முடங்காமல் தீயெரித்து வெடுத்துப் பாரு
வாடியே திரியாதே பித்த நோய்கள்
மாண்டுபோமிஞ் சிச்சார் மண்டலமே கொண்டால்
தேடியே அலையாதே தாம்புர செந்தூரம்
செம்பினுட அரபொடியும் பலந்தான் வாங்கி
காடியுடன் புளி மலமும் ரெண்டுஞ் சேர்த்துக்
கரைத்துமே அரபொடியை யதிலே யிட்டே (3)

இட்டுவைத்து மண்டலஞ் சென்றெடுத்துப் பாரு
இந்திரனைப் போலிருக்கும் ஊறல்போகும்
பட்டுப்போம் சரிகெந்தி கூடக்கூட்டிப்
பழச்சாற்றி லரைத்திடுவாய் சாமம்நாலு
வட்டுப்போல் சட்டிக்குள் வைத்துமூடி
மண்பூசி யெடுத்திடுவாய் சாமம்நாலு
கட்டுமடா செந்தூர முருக்கம்பூப்போல்
கலங்காதே நெய்யி லுண்ணக் குன்மம்போமே (4)

கருவங்க செந்தூரம்.

போமப்பா கருவங்கம் பலமொன்றேதான்
புடம்போடு ஆவரம்பூ வரைத்துப்பூசி
நாமப்பா ஏழுதரந் தீர்ந்துதானால்
நன்றாகக் கட்டாச்சு பலமொன்றுக்கு
ஆமப்பா காற்பலந்தான் ரசமுங் கூட்டி
அரைத்திடுவாய் சரிகெந்தி பழச்சாற்றாலே
தாமப்பா அரைத் தெடுத்து வட்டுப்போல
சட்டிக்கு ளிட்டுநீ ஓடுமூடே (5)

சட்டியிட்டுமேல் மூடிச்சீலை செய்து
தானெரிப்பாய் சாமம்நால்கம லம்போலே
அட்டதிசை வெல்லுமடா செந்தூரந்தான்
அறுமூன்று குட்டநோய் கற்றாழஞ்சாற்றில்
முட்டவிட்ட காப்பநோய் மேகந்தீரும்
முன்னவனைப் பூசிப்பாய் வெள்வங்கம் வாங்கு
கட்டிவிட்ட வெண்முள்ளிச் சாற்றிற் சாய்க்க
கட்டியது நொருங்கும்பார் சரிகெந்தி கூட்டே. (6)

வெள்வங்க செந்தூரம்.

கெந்தியிட்டுப் பழச்சாற்று லரைத்துவட்டு
கெடியாகச் சட்டிக்கு ளிட்டுமூடி
சந்தேகமில்லாமற் சீலைசெய்து
தானெரிப்பாய் நாளொன்றிற் செந்தூரந்தான்
தந்தனமென் றேடுமடா சூலைநோய்கள்
சயங்கள்முத லற்றுதடா இருமல்தீரும்
வந்தநோய்க் கனுப்பானந் தேனிலுண்ண
வாங்குமடா மேல்விழுந்தவெள்ளை போமே (7)

வெள்ளி செம்பு பித்தளையு மிரும்புநாகம்
வெள்வங்கம்கருவங்கம் உருக்கு வெங்கல்முதம்
கள்ளிச்சா றதனிலேந்து சுத்திசெய்து
களஞ்சியொன்று வகைவீதம் கெந்திசேர்த்துத்
துள்ளுரசங் களஞ்சியிட்டுப் பழச்சாற்றாலாட்டிச்
சுகமாக அரைத்துவட்டுச் சட்டிக்குள்ளே
மெள்ளவைத்து மேலோடு கவிழ்த்திமூடி
விருப்பியே சீலைசெய்து அடுப்பிலேற்றே. (8)

நவலோக செந்தூரம்.

அடுப்பில் வைத்துத்தீ யெரிப்பாய்சாமம்நாலு
அருணன் போலிருக்குமடா செந்தூரத்தைத்
துடிப்புள்ள பதின்மூன்று சன்னிக்குந்தான்
சுகமாகக் கொடுத்துவிடு சுரத்துக்கப்பா
கொடுப்பாயே மிளகுசுக்கு அரத்தை மூலம்
கொத்தமல்லி பேய்ப்புடலின் கஷாயந்தன்னில்
எடுப்பாய்நீ வெள்ளி செம்பு வெங்கலம் பித்தாளை
இரும்புமுத லஞ்சுவகை களஞ்சியொன்றே. (9)

வகைவகைக்குக் களஞ்சிரசம் சவ்வீரங் கூட்டு
மைந்தனே களஞ்சேழு கெந்தியேழு
துகையீரேழ் பதினாலும் பழச்சாற்றாலாட்டி
துகையான பூநாகச் சாற்றாலாட்டி
புகையடங்க சட்டியிலே வைத்துமூடி
புகழ்மூன்று சீலைமண் ணுஞ்செய்து வைத்து
சிகைநாலு சாமமது யெரித்துவாங்கு
செந்தூரமாகுமது சூலைபோமே. (10)

சூலைபதினெட்டுமருஞ் சோகைதீரும்
சுத்தமாங் கைகாலில் முடக்குந்தீரும்
மாலைக்கண் கபாலநோய் புத்துந்தீரும்
வாந்தியொடு வயற்றிரைச்சல் கடுப்புந்தீரும்
சாலவே யிதற்கெல்லாம் பத்தியமாயுண்ணு
தடிப்பென்ற சிகப்புவெள்ளை கருப்புந்தீரும்
மூலவே நாலுவகை செந்தூரங்கேள்
முட்டை பற்பம் அப்பிரகபற்பமாமே. (11)

பற்பமுடன் பவளபற்பம் வங்கபற்பம்
பாச்சுவாய் வகைக்கு அரைப் பலமெடுத்து
உற்பனமாய்ச் சரிகெந்தி கூடச்சேர்த்து
உறவாட்டு பழச்சாற்றால் நாலுசாமம்
கற்பூரம் அரிதாரம் கூடச்சேரு
கலங்காம லரைத்துச் சட்டிக்குள்ளேவைத்து
நற்பாக மேலோடு சீலைசெய்து
நன்றாக நால்சாம மெரித்துவாங்கே (12)

வாங்கினதோர் செந்தூர முருக்கம் பூப்போல்
வருமிஞ்சிச் சாற்றில் சன்னிக்குத்தாக்கு
ஏங்கியே அலையாதே கிரந்திசூலை
இடுப்புவலி வருகெண்டை தேனிலுண்ணு
தாங்கியதோர் வாய்வுக்கு நெய்யிலுண்ணு
சண்ணுமடா வைத்தியமும் நூறிற்பாரு
தூங்கியே விழுகாதே கவனித்துப்பார்
சாத்துக்கு மாத்திரையைச் சொல்லக்கேளே. (13)

சொல்லக்கேள் பாஷாணங் கெவுரிலிங்கம்
சுகமாகச் சுத்தியது செய்து கொண்டு
சொல்லக்கேள் குழிக்கல்லில் மூன்றுமிட்டு
சுருக்கான பழச்சாற்றால் மூன்றுசாமம்
நல்லோர்கள் பணியும் விநாயகனைப் போற்றி
நன்றாக ஆட்டியதை வழித்துக் கொண்டு
மெல்லவே சிறுபயறு உழுந்துவீதம்
விளங்கவே உருட்டியதை உலர்த்திக் கொள்ளே. (14)

உலர்த்தியே ஒருகலசந் தன்னிலிட்டு
உடன்மூடிச் சீலைசெய்து நெல்லுக்குள்வைத்து
நலத்துடனே மண்டலஞ்சென் றெடுத்துக் கொண்டு
நலங்கெட்ட வாதசுரந் தனக்குக்கேளு
பெலத்துடனே வேப்பந்தோல் கஷாயத்திலுண்ணு
பேரான பித்தசுரங் குடிகெட்டோடும்
குலத்துடனே சிலேற்பனசுரத்துக் கெல்லாம்
கொடுத்துவிடு தேனிலே குணமாய்த் தீரும் (15)

திருமடா உடல்நோயுந் தெளிந்து போகும்
செந்தூரஞ் செய்வதற்கு இதுதான் சூஸ்திரம்
ஆருந்தானிப்படியே சுருக்கிச்சொல்வார்
அப்பனே சுந்தரமே அறிந்து செய்வாய்
பாருநீ குருவேணுங் கைமுறைதான் வேணும்
பதறாதே யிப்படியே வைத்தியஞ்செய்வாய்
காருநீ யீரிரண்டு காண்டமாகும்
கருவானசெந்தூரம் பதினாறு முற்றே. (16).

நான்காவது காண்டம்
முற்றிற்று.

இந்த நான்காங் காண்டத்திற் செந்தூர முறைகள் சொல்லப் பெற்றது. இனி ஐந்தாவது காண்டத்திற் பற்ப முறைள்க சொல் லுவதுகாண்க.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிரு காண்ட

வைத்தியம்.

ஐந்தாவது பற்ப காண்டம் 16

பவளச் சுண்ணம்.

செந்தூரம் பதினாறில் தீர்க்கஞ் சொன்னேன்
சிவாக்கி யென்குருவைப் போற்றி செய்து
உந்தனுக்குப் பற்பமதைச் சொல்லக்கேளு
உமையாளைப் பங்கில் வைத்த சிவனைப் போற்றி
தந்திரம்போற் பற்பமடா பவளச் சுண்ணம்
தனிப்பவளம் பெரிதாக வாங்கி வந்து
அந்தகனார் வாகனத்தி னிலை யரைத்து ⟶ ⊕
அப்பியே ஓட்டில் வைத்து ஓடுமூடே. (1)

மூடியே குக்குடமாம் புடத்தைப் போடு
முட்டைபோல் நீறுமடா பவளச்சுண்ணம்
தேடியே கொழுஞ்சி தும்பை பிரண்டை சாரணை
சிறுமுருங்கை வகைபஞ்சு கசாயத்துண்ணு
பாடிவந்த மூன்றிலுள்ள வியாதி தீரும்
பறந்துவிடுஞ் செமியாத வாய்வு தீரும்
ஆடிவிடுங் கைகால்கள் நடுக்கந் தீரும்
அண்டத்தோல் தனைநீற்ற முறையைக் கேளே (2)

முட்டைஓடு சுண்ணம்.

முறையாக பவளத்தை நீற்றி வைத்து
முன்சொன்ன இலையரைத்து முட்டைத் தோட்டை
குறையாமல் பிசரிவைத்துஒட்டி விட்டு
குணமாக மேலோடு குக்குடத்தில் நீறும்
மறையாதே சருக்கரையில் கூட்டியுண்ண
வரிசை நீரிழிவதுவு மாண்டுபோகும்
சரையாதே யாரிடத்தும் வெளியிடாதே
சரீரத்தில் நீர்களது அற்றுப் போமே (3)

நீர்களற்றுப் போகுமடா வாழைப் பூவை
நிழலுலர்த்தா யுலர்த்தியே சுட்டசாம்பல்
பார்க்கையிலே அதிசயமா மூலிநீர்விட்டு
பருமுத்து மேல்பூசிப் புடத்தைப் போடு
பூக்கமலம்போலமர்ந்து நீறிப்போகும்
புண்ணியவான் தானருந்த வாய்வு தீரும்
சீக்கிரமே செய்துண்ண வயிரதேகம்
தேவனே யானாலும் அருந்தலாமே (4)

ரசச் சுண்ணம்.

அருந்துவாய் ரசபற்பஞ் சொலலக்கேளு
அப்பனே கருவூமத்து பாஷாணங் கெந்தி
வருந்தியே யரைத்து மைபோற் குகையாய்ச் செய்து
வளமான ரசங்களஞ்சி யஞ்சுவிட்டு
தருந்தயமாய்ச் சட்டியுள்ளே யுப்பைக் கொட்டி
தாமாகப் படிமூன்று குகையுள் வைத்து
பெருந்தீயாய்ப் போடாதே மேற்சட்டிமூடி
பிசகாமல் மண்சீலை ஏழுஞ் செய்யே (5)

செய்யவே கமலம்போ லெரித்து வாங்கி
திறமாக மேற்சட்டி பதங்கமாகும்
உய்யவே சுறண்டியெடு பற்பந்தன்னை
உத்தமனே பத்திரமாய் வைத்துக் கொண்டு
அய்யமில்லை குட்டம்பதினெட்டுந்தீர
அரைப்பணமு மூன்றரை நாளேழுபோது
பய்யவே வாய்கட்டும் மருதம்பட்டை
பாச்சுவாய் கசாயமிட்டுவா யில்வாறே. (6)

வாயில் விட்டுக் கொப்பளிக்கக் கிரந்திரூலை
வாதபித்தங் காமாலை சோகை பாண்டு
காயமது பிலக்குமடா நோய்கள் திரும்
கண்டமாலை யென்றதெல்லாங் கடந்துபோகும்
மாயமாய் வந்தபில்லி முடக்கந்திரும்
வஞ்சனையாய் வைத்தேவல் மயக்கந்திரும்
தாயகமா யிடைபாகம் நூற்றிற்பாரு
தானான அப்பிரகபற்பம் பாரே. (7)

அப்புரக பற்பம்.

தானான அப்புரகத் தகடுவாங்கி
தயவான கோமயத்திற் சுத்திசெய்து
கோனான கற்பூரவல்லி யிலையரைத்து
குக்குடமாம் புடம்போட நீரிப்போகும்
பானான அமுக்கிரா வேர்க் கிசாயம்
பாக்குமடா அகத்திவேர்க் கிசாயம் நன்று
ஊனான மேகமென்ற ரோகமெல்லாம்
உஷ்ணங்கள் உள்சூடு மாறிப்போமே. (8)

வெள்வங்க பற்பம்.

மாரிவிடும் வெள்வங்கம் நீர்முள்ளிச்சாற்றில்
மகிழ்வாக உருக்கிச்சாய் மூன்றுவட்டம்
தேரியே யிதையெடுத்துச் சிவந்தவேளை
திடமாக அதையரைத்துப் பொதிந்து சீலை
யீரியே சீலைசெய்து குக்குடத்தில் நீரும்
மேகத்துக் கனுப்பானம் நெய்யிலுண்ண
ஆரிவிடு மேகமென்ற தெல்லாம் போகும்
அப்பனே சூலையொடுகுன்மம் போச்சே. (9)

கருவங்கப் பற்பம்

குன்மம்போம் கருவங்கம் நீற்றைக்கேளு
குணமான கருநொச்சி யிலையுலர்த்தி
வன்மமாய் வங்கத்தைப் பொடியாய்ச்செய்து
வகையாக நொச்சியிலைப் பொடியிற் சேர்த்து
தன்மமடா கம்பளியிற் பொதிந்துவைத்து
தானிரண்டு மண்சீலை செய்துலர்த்தி
நன்மமில்லை குக்குடத்தில் நீரிப்போகும்
கருவங்க பற்பமடா சுழுவுதானே. (10)

தார பற்பம்.

சுழுவான வங்கபற்பம் நெய்யிற்கொள்ளு
துடியான மேகமெல்லாம் வாங்கிப்போகும்
அழிவான சிரங்குமேற் றடிப்புத்தீரும்
அரிதார பற்பமினி யரையக்கேளு
நழுகாத புரசவிரைத் தைலந்தன்னில்
நாற்பதுநா ளதையூர வைத்தெடுத்து
வழுவாதே அதின்பட்டை சமூலஞ்சுட்டு
மைபோலே அரைத்துருட்டிக் குகையும் பண்ணே. (11)

உருட்டிவைத்த குகைக்குள்ளே கோளிக்கட்டம்
உடன்பிரக்கி வெள்ளை மலம்பொடிய தாக்கி
அருட்டியே மால்தேவி கீள்மேலிட்டு
அம்மருந்தால் குகைமுட்டச் சட்டிக்குள்ளே
பொருட்டாக ஆற்றுமண லரைவாசியிட்டு
பொருந்துகுகை சீலசெய்து அதின்மேலிட்டு
மருட்டாக மேலோடு கவிழ்த்திமூடி
மண்பூசி யெரித்திடு நால்சாமந்தானே. (12)

எரியிட்டு ஆறியபின் னெடுத்துப்பாரு
இருக்குமப்பா கூகைநீர்போலே பற்பம்
அரிவுகெட்ட சனங்களுக்கு மீளநோய்க்கும்
அரிதான இருமலொடு இளைப்புக்கெல்லாம்
வரியான வெள்ளாட்டுப் பாலிலுண்ண
வாங்குமடா நாலுநோ யிதிலேதீரும்
குரியாக வைத்தியத் திரட்டென்பதும்பார்
குரையாத செல்வமே யின்னுங்கேளே. (13)

கெந்தக பற்பம்.

இன்னுங்கேள் சிகப்பியுட நீதம் வாங்கி
இனிதான கெந்தகத்தை ஊரவைத்து
மன்னவனே பத்துநாற் சென்றபின்பு
வரிசையா யதைபெடுத்துப் பூநீற்றுக்குள்
சொன்னேனே கலசத்திற் கீழ்மேல்நீரு
சுகமாக வைத்துமே மேலோடுமூடி
நன்னயமாய்ச் சீலசெய்து குளிதான்வெட்டி
நலமான திருகுகள்ளிச் சாம்பல்போட்டே. (14)

சாம்பலுமே குளிகையி லரைவாசியிட்டு
தனிமருந்துக் கவசத்தை மேலேவைத்து
சாம்பலையு மதுமேலே யிட்டுமூடி
தான்மண்ணை யிட்டதன்கீ ழடுப்புக்கூட்டி
தேம்பாமல் நாற்பதுநாள் தீயைமூட்டி
திறமாக எரித்திடு நாள்ச்சென்ற பின்பு
சோம்பாமல் பத்துநாளாரப் போடு
தோண்டியே நீயெடுத்துப் பார்த்திடாயே. (15)

பார்த்திடவே கெந்தகந்தான் சுண்ணமாகும்;
பரிசுகெட்ட கிரந்திக்கு வெல்லமப்பா.
ஏற்கவே சூலைக்குமதுவே யாகும்
இணங்காத குன்மத்துக் குமட்டிச்சாறு
வாக்கிலுள்ள இருமலுக்கு நல்லஎண்ணெ
மண்டைப் பீனிஷத்துக்கு மெண்ணெயாகும்
ஏற்கையுடன் நிகண்டுநூற் பதினாறும்பார்
இதுசூஸ்திரம் அஞ்சாக யிசைத்தேன் முற்றே. (16)

ஐந்தாவது காண்டம்

முற்றிற்று.

இந்த ஐந்தாவது காண்டத்தில் பற்பக்காண்ட முறைகளைச் சொல்லப் பெற்றது, இனி ஆறாவது காண்டத்தில் தைலமுறைகள் சொல்லுவது காண்குக.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிரு காண்ட

வைத்தியம்.

ஆறுவது தைலக்காண்டம் - 16

இசைவான வெள்ளிமலைச் சிவனைப்போற்றி
என்குருவின் நந்தீஷர் பாதம் போற்றி
அசையாத செந்தூரம் பற்பமுண்டால்
அனல்கொண்டு உடல்கூடு தனியவேணும்
நிசமான தைலமற்புத மதாக
நேராகச் சுந்தரமே சொல்லக்கேளு
திசைபுகழும் தைலமுறை நூற்றிலேதான்
செப்புவேன் வேப்பந்தோள் பலமும்நூறே. (1)

வாதத் தைலம்.

நூறுபலமறுகன்வேர் பலமும்நூறு
நொடிவாத மடக்கிவேர் பலமும்நூறு
வீருப்ச்சை ஷமத்தைவேர் பலமும்நூறு
விளம்பிவய நானூற்றில் பலமும்சுக்கு
சாரியுட னைத்தட்டி பானையிட்டு
தண்ணீரு தூணிவிட்டு வற்றக் காய்ச்சு
ஆறவிட்டு வடிகட்டிப் படிநாலாக்கி
அப்பனே மிளகஞ்சு பலமும்போடே. (2)

போடப்பா சாதிக்காய் சாதிப்பத்திரி
புகழுடனே அசத்தைசுக்கு இஞ்சியேலம்
கூடப்பா வெள்ளுள்ளி ஓமம் மல்லி
கூறுவேனதி விடையஞ் சீரங்கூட்
நாடப்பா இதுவெல்லாங் களஞ்சிவீதம்
நன்றாகப் பொடிசெய்து வைத்துக்கொண்டு
தேடப்பா வெள்ளாட்டு பசுவின்பாலும்
செவ்விளநீ ரிதுமூன்றும் படிமூன்றுமே. (3)

ஆமப்பா தைலம் வைத்த பானை தன்னில்
அஞ்சுபடி யெண்ணெவிட்டு மருந்தைப்போடு
நாமப்பா வீளிநீர் கூடவிட்டு
நன்றாக மெழுகுபதங் காய்ச்சிவாங்கு
போமப்பா முழுகிவர நோய்கள் போகும்
புண்ணியவான் செய்திடுவான் மற்றோன் செய்யான்
ஆமப்பாவாதமென்ற தெல்லா நோயும்
அற்றுதடா வாதசுரந் தீர்ந்துபோமே. (4)

பித்தத்துக்குத் தைலம்.

தீருமடா பித்தத்தின் தைலங்கேளு
செம்முள்ளி சித்தகத்தி அமுக்கிறாவும்
பாருநீ நொச்சிவேர் நெல்லிவேரும்
பண்பான கொடுப்பைவேர் சூரிவேரும்
சீருடனே இவ்வேழும் பலம் தூரப்பா
சிறக்கவே பானைதனீல் தரித்துப்போட்டு
வாருநீர் தூணிவிட்டு வற்றக்காய்ச்சி
வடிகட்டிப் படிநாலு மெடுத்துக்கொள்ளே. (5)

எடுத்துஒரு பாண்டத்தி லிட்டுக்கொண்டு
இதமாக மேல்வகையைச் சொல்லக்கேளு
எடுத்துமே எண்ணெ படிநாலுவிட்டு
இஞ்சிச்சார் பழச்சாறு நெல்லிக்காய்ச்சார்
எடுத்துவிடு மொசுமொசுக்கை கொடுப்பைச்சாறு
இனிதான பாகலிலை கரிப்பான்சாறும்
எடுத்துவிடு பசுவின்பால் இளநீர்தன்னை
இதொன்பதும் வகைக்கு அரைப் படியாய்ச்சேரே .(6)

சேரப்பா மிளகுசுக்குக் கிரும்புயேலம்
சித்தரத்தை அதிவிடையஞ் சாதிக்காயும்
ஆரப்பா திப்பிலி வால்மிளகு கூட்டு
அப்பனே வேப்பரிசி கடுக்காய் ஓமம்
காரப்பா சந்தனமும் விலாமிச்சைவேரும்
கஸ்தூரி புளுகுகோஷ்டம் தானிக்காயும்
நேரப்பா இதுவெல்லாங் களஞ்சிவீதம்
நிறுத்துநீ பொடிசெய்து கூட்டப்போடே: (7)

செய்துபெரி மெழுகு பதம் வடித்துக்கொண்டு
சீலையிலே வடிகட்டி முழுகுவாய்நீ
பையலுக்கு மாகுமடா சூலிக்காகும்
பைத்தியங்க ளூற்றதெல்லா மோடிப்போகும்
கொய்துவிடுஞ் சன்னிபதி மூன்றுக்காகும்
குடிகெடுத்த பல்நோயுந் தீர்ந்துபோகும்
கொய்துவிடுங் குஷ்டநோயுங் கிரந்திசூலை
குட்டநோய் தீருமென்று சொன்னேனானே. (8)

சிலேற்பனத் தைலம்.

சொன்னேனே சிலேற்பனத்தின் றைதலஞ்சேளு
சுண்டைவேர் அவரிவேர் தூதுவளைசமூலம்
சொன்னேனே கண்டங்கத்திரியின் வேரும்
தொண்டுபெற வேலிவேர் தாளிவேரும்
சொன்னேனே சம்பாநெல் வேரோடேழும்
தூக்குவாய் பலம் நூறுந்தரித்துக் கொண்டு
சொன்னேனே பானைக்குள் போட்டுநீரை
தூணிவிட்டு காச்சிப் படிநாலுவாங்கே (9)

வாங்கியே எண்ணை படிநாலுவிட்டு
வால்மிளகு சாதிக்காய் அரத்தைசுக்கு
ஓங்கியே அதிமதுரம் அக்கிராகாரம்
ஓமமுடன் சீரகமும் வசம்புமல்லி
தாங்கியே வகைபத்துங் களஞ்சிவீதம்
தானுரவாய்ப் பொடிசெய்து கூடப்போட்டு
ஏங்கியே முலைப்பாலு மிஞ்சிச்சாரும்
இதுரெண்டுங் கூடவிட்டுக் காய்ச்சுவாயே. (10)

காய்ச்சியே மெழுகுபதம் வடித்துக்கொண்டு
கணபதிக்குப் பூசைசெய்து முழுகுவாநீ
தேச்சியமாய் சிலேற்பனத்தி லெழுந்தநோய்கள்
தீருமடா சுந்தரனே திரத்தைப்பாரு
மாச்சிந்த மூன்றுவகை தயிலத்தாலே
மாண்டுதேடா மூன்றுவகை நோயுந்தீரும்
தேச்சியங்கள் வையாதே பதிமூன்றுசன்னி
தீர்க்கவே தைலமொன்று வைப்பாய்கேளே. (11)

சன்னித்தைலம்.

வையப்பா வேப்பெண்ணை ஏரண்டத்தெண்ணை
வகையாகப் புன்னையெண்ணை புங்கயெண்ணை
மெய்யப்பா இலுப்பையெண்ணெய் படி.ஐந்தும்விட்டு
விளம்புகிறேன் மேல்மருந்து வெளியதாக
ஐயமில்லை முசுருமுட்டை கோழிமுட்டைமஞ்சள்
அடைக்கோழி மலமுடனே தேடிமூன்றும்
செய்யவே பூணுகம் வசம்பு உள்ளி
சீரகமுஞ் சுக்குடனே சமனயச்சேரே. (12)

சமனாக இவைபல மொன்றாகச் சேர்த்து
சரியான வெண்ணையுடன் மருந்தும்போட்டு
கமகமென்று மெழுகுபதங் காய்ச்சிக்கொண்டு
கணபதிக்குப் பூசைபண்ணி எடுத்துவைத்து
எமனாகவந்தசன்னி பதிமூன்றுக்கும்
இரையளவு உள்ளுககுக் கொடுக்கத்தீரும்
உமையாணை மேலுக்குத் தடவத்தீரும்
உத்தமனே இத் தைல முறைசொல்லாதே (13)

சன்னி தீர்ந்தபின் முழுக்குத்தைலம்.

சொல்லக்கேள் வேப்பெண்ணை ஏரண்டத்தெண்ணை
துடியான புன்னை யெண்ணை புங்கனெண்ணை
வெல்லவே ஆவெண்ணை அஞ்சுங்கூட்டி
விளங்கவே படியஞ்சும் வைத்துக்கொண்டு
சொல்லக்கேள் வில்வவேர் வேலிவேரும்
துளசி சுத்திரிவேரும் தூதுவளைசமூலம்
வல்லவனே மொசுமொசுக்கை வேளைவேரும்
வளங்குசங்கவேர் மேனிவேருஞ்சொல்லே. (14)

சொல்லென்ற வேருகளைத் தோண்டியப்பா
சுகமுடனே மண்போகக் கழுவிக்கொண்டு
வல்லதொரு வேருகளைத் துண்டுதுண்டாய்
வைத்தேதா ஞேரிடையா வைத்துக்கொண்டு
நல்லதொரு ஒன்பதுவும் துலாமொன்றப்பா
நருக்கியொரு பானையிட்டுத் தூணிநீரும்
மெல்லவே காய்ச்சியதை படிநாலாக
வேடுகட்டி வடிகட்டி யெடுத்துவையே (15)

எடுத்து நீ விநாயகர்க்குப் பூஜை செய்து
இனிதான ஜன்னிவந்து தீர்ந்த போக்கு
தொடுத்ததொரு தைலத்தை முழுகச்செய்தால்
சுகமாகும் ஜன்னிகளு மணுகாதப்பா
அடுத்தடுத்து மூன்றுதரம் முழுகச்செய்து
அன்றைக்குப் புளிபுப்பை நீக்கச்சொல்லு
கடுத்தமுள தைலமிது வெளிவிடாதே
கணக்கான இருமூனறு காண்டமுற்றே. (16)

ஆறுவது காண்டம்
முற்றிற்று.

இந்தப்பாட்டு இரண்டும் யேடுடனே துண்டாயிருந்ததை சில மகாண்க ளிதையுஞ் சேர்த்துப் போடவேணுமென்று விருப்பிய தால் இதையுஞ் சேர்த்திருக்கிறது.

பித்தத்திற்குத் தைலம்.

உத்தமதொரு பித்தமரத் தைலங்கேளு
உண்மையிது கோவைவேர் கொடுப்பைவேரும்
நத்தசெப்பு நெருஞ்சி சிருகீரைவேரும்
நன்னாரி துளசிவேர் கிரந்திவேருங்
சுத்தியாய் சுண்டைவே ரிவைகளெட்டும்
தூணிநீர் பானையிட்டு வேரும்போட்டு
வத்தவே காய்ச்சிவிடு படிநாலாக்கி
வடிகட்டி நாலுபடி எண்ணெவாரே. (1)

எண்ணெயிட்டு மிளகு பலம்பத்தும்போட்டு
இனிதான மெழுகுபதம் வடித்துமுழ்கு
உண்ணவிட்டு பத்தியமாய் நின்றுதேரு
உலகத்திலிது சுருக்கத் தைலபாகம்
விண்ணளவு நோயெல்லாந் தீர்ந்துபோகும்
வெளிவிடா தடக்கினவன் சித்தனாகும்
பொன்னப்பா ஈஸ்பரனார் சொன்னவாக்கு
புகழ்ந்துரைத்த பாட்டிதுதானிரண்டு முற்றே. (2)

இந்த ஆறுவது காண்டத்தில் தைலக்காண்ட முறைகளைச் சொல்லப் பெற்றது, இனி ஏழாவது காண்டத்தில் கற்பஞ்சொல் லுவதுகாண்குக.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிருகாண்ட

வைத்தியம்.

ஏழாவது கற்ப காண்டம் - 16

சீராகச் சடையில் கெங்கை தன்னைவைத்த
சிவன்மயேஸ்பரி பாதந்தினமும் வாழ்த்தி
நேரான அடிமுடியுங் நெஞ்சில்வைத்து
நேர்மையுடன் மனோன்மணியைப் பூஜைசெய்து
காரானை முகவனையும் கருத்துள்வைத்து
கற்பமுறை சொல்லுகிறேன் சுந்தரமேகேளு
தீராதசாபமது தீர்த்துநீயும்
தீச்சை முப்பத்தி ரண்டையுமே சித்திசெய்தே. (1)

அறுசுவை களட்ட.

செய்தபின்பு சரீரத்தின் சுவைகள்போக்க
செப்புகிறே னறுசுவையுங் களற்று மார்க்கம்
எய்துவிடுங் கடுக்காயைப் பொடியாய்ப் பண்ணி
எரண்டத் தெண்ணையுடன் கலந்துகொண்டு
துய்யவே வெள்ளைக் காக்கணத்தின் வேரை
சுகமாக அரைத்து எண்ணைகூடச்சேர்த்து
மெய்யுடனே மெழுகுபத மாகக்காய்ச்சி
மேலாக மூன்றுநா ளருந்துவாயே. (2)

அருந்திவிடச்சீதமெல்லாங் கழிந்துபோகும்
அரிவுடனே மலமெல்லா மிரங்கிப்போகும்
பொருந்திநின்ற சிலேற்பனத்தின் வியாதியாவும்
போகுமப்பா உடலைவிட்டு அறுசுவையும்
வருந்துவாய் பச்சரிசி பாலிற்பொங்கி
மகிழ்வாக யிருவேளை புசித்துக்கொண்டு
இருந்த பால் வெண்ணை பாசிப்பயறும்
இனிதாகப் பச்சமொன்று முழுகிக்கொள்ளே. (3)

சுண்ணவகை களட்ட.

கொள்ளப்பா சுண்ணவகை களட்டிப் போட
குணமான பச்சைமஞ்சள் சமூலம்போட்டு
விள்ளப்பா படிசலத்திற் போட்டுக்காய்ச்சி
மெள்ளவே அரைக்காலா யிருத்துக் கொண்டு
எல்லெண்ணெ படியரைக்கால் கூடச்சேர்த்து
இரேகித்து ஐந்துநாள் உண்டுவா நீ
மெள்ளப்பா சுண்ணவகை களன்றுபோகும்
மெய்யாக எண்ணெ தனைப்போக்குவாயே. (4)

எண்ணெய் களட்ட.

எண்ணெ தனைக் களற்றுதற்கு வகையைக்கேளு
இனிதான சீயக்காய்ப் பொடியினோடே
நன்னயமா யிலுப்பையிலைச் சாறுநாளி
நலமான தாளியிலை சாறுநாளி
சொன்னவகை படிரெண்டும் அமுரிரெண்டும்
சொல்முரையாய்ப் படிநாலுந் தாளிசேர்த்து
மன்னவனே எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
வடிகட்டி யிருத்ததிற் பூநீருபோடே. (5)

உப்புகளட்ட.

போடுநீ அரைக்களஞ்சி சீனச்சுண்ணம்
போடுவாய் அதைக்களக்கி கலந்துஉண்ணு
கூடுநீ மூன்றுநாளுண்டா லெண்ணெ
கொடுஞ்சுறுக்காய்க் களறுமடா யெண்ணெபோச்சு
தேடுவாயுப்பை நீ களற்றிப்போடச்
செப்புகிறேன் கரிசாலைச் சாறுவாங்கி
நாடுவாய் கால்படிச்சா ரெடுத்துக்கொண்டு
நன்றாகக் கற்றாழை விழுதிடித்தே. (6)

மதுரங் களட்ட:

இடித்தசார் காற்படிதா னளவெடுத்து
இரண்டையுமே வாலையிலிட்டு மூன்றுநாட்கொள்
துடித்துடலில் ஊருகின்ற உப்புப்போச்சு
சுகமான மதுரமது களற்றக் கேளு
நடித்தமிகு சாரமுள்ள கள்ளுகால்தான்
நல்லாவின் நெய்யதுவுங் கூடச்சேர்த்து
மடித்துவிடப் பருத்திவிரைப் பருப்புமொன்று
வகையாகக்கடைந்து நீ கூடச்சேரே. (7)

புளிப்புக் களட்ட.

சேத்துண்ண ரசனேயது களரும்பாரு
திடமான புளிக்களட்ட வகையைக்கேளு
மாத்தில்லா புளித்தோட்டைச் சுட்டுசாம்பல்
வகையாகச் சலங்கலந்து தெளிந்த தண்ணீர்
போற்றியே கால்படிதான் அருந்துவாய்நீ
புண்ணியனே மூன்றுநாள் புளிப்புப்போச்சு
கூத்தனுமே உன்னிடத்திலனுகமாட்டான்
குணமாக உன்தேகம் காந்தியாமே. (8)

நரைதிரைமார,

காந்தமா மிருகளஞ்சி களஞ்சிதங்கம்
கருத்துடனே நாகமொரு களஞ்சிசேரு
சாந்தமாமூன்று மொன்றாய் உருக்கிவாங்கி
தயவுடனே களஞ்சிரசங் கூடச்சேர்த்து
வந்தியிந்தக்களஞ்சி ஐந்துங்குளிக் கல்லிட்டு
இனிதான சரிகெந்தி கூடச்சேர்த்து
ஆய்ந்தபுகள் பொற்கையான் சாருவிட்டு
அறுசாம மரைத்து அதை நிழலுலர்த்தே (9)

நிழலுலர்த்தி குப்பியிலே அடைத்துவைத்து
நீயேளு சீலைசெய்து வாலுகையிலேத்தி
வழமாகக் கமலம்போல் சாமமாறு
வயிரவனைப் பூசைசெய்து எரித்துமேபூங்
குழலாளைப் பூசைசெய்து செந்தூரத்தை
குன்றியிடை தேனிலுண்ண நரைதிரைபோம்
பழுத்ததுவுங் காயாகும் பிஞ்சுமாகும்
பலநினைவு தள்ளியப்பா உண்டுதேரே. (10)

உண்டுவிடு கற்பமிது மற்றோர்பாகம்
ஒருகளஞ்சி தங்கமப்பா யியம்ரெண்டு
மண்டலத்தில் நாகமொரு களஞ்சிதூக்கி
வளமாக உருக்கியதை குளிக்கல்லிட்டு
அண்டர்புகழ் ரசமுமொரு களஞ்சிசேர்த்து
அரைத்திடுவாய் சரிகெந்தி மல்லிச்சாற்றால்
கண்டாயே நாகமல்லிச் சாற்றாலாட்டி
காற்றூட நிழலுலத்திக் குப்பிக்கேற்றே. (11)

குப்பிக்குச் சீலைசெய்து வாலுகையிலேத்தி
குணமாகத் தாயாரைப் பூசைபண்ணி
மெய்ப்புடைய வைரவனைத் தியானஞ்செய்து
விநாயகனைப் பூசைபண்ணி சாமமாறு
தப்பாமல் கமலம்போ லெரித்துவாங்கி
தணலாரச் செந்தூரம் முருக்கம்பூப்போல்
நப்பாக மூன்றரைப்புச் சாமமாறு
நன்றாகக் குன்றியிடை நெய்யிலுண்ணே. (12)

உண்ணவே நரைதிரையு மாறிப்போச்சு
ஒருகோடி சதிர்யுகமு மிருக்குந்தேகம்
மண்ணவே உன்தேகங் காந்திமீரும்
மலசலமும் உமிள்நீரால் லோகந்தங்கம்
கண்ணப்பா பவளம்போற் சிவந்துபோகும்
காலங்கில்லை கயிலாசதேகமாச்சு
விண்ணிலே நட்சத்திரம் பகலிற்காணும்
வேதாந்த சித்தாந்தம் தோணும்பாரே. (13)

தோணவே பூனகச் செம்பைவாங்கி
சுகமாகச் சரியிடையாய்த் தங்கஞ்சேர்த்து
காணவே நாகமொரு களஞ்சிசேரு
கலங்காதே களஞ்சிரசங் குளிக்கல்விட்டு
கோணாதே சரிகெந்தி சுரோணிதத்தாலாட்டி
குணமாக நிழலுலர்த்திக் குப்பிக்கேற்றி
நாணமல டப்பேற்றி பணிரெண்டுசாமம்
நன்றாகக் கமலம்போ லெரித்துவாங்கே. (14)

வாங்குவாய் விநாயகனைப் பூசைபண்ணி
மனதொன்றாய்ச் செந்தூரங் குன்றியுண்ணு
ஏங்கியே அலையாதே சருக்கரையி லுண்ணு
இருக்கலாம் வெகுகோடி யுகங்கள்தானும்
தாங்கியதோர் கற்பம்நூற்றைம் பதும்பார்
சரியான கற்பமுறை நூறும்பாரு
மாங்கிஷமாங் கற்பமென்ற வெள்ளைக்கோழி
வகையான கருங்கோழி சாவல்பேடே. (15)

பேடானதென்று சொல்லுங் கோழிமுட்டை
பிரக்கியே கெருடனிட சாற்றில் வெந்து
நாடவே அண்டந்தான் தினமுமொன்று
நலமாக மண்டலமே யுண்டுதேறு
வாடவே வேண்டாங்காண் நரைதிரையும்போச்சு
மகாகோடி சதுர்யுகமு மிருக்துந்தேகம்
தேடாமற் பாடிவைத்தேனேழாங் காண்டம்
தெளிவாகப் பதினாறுபாடல் முற்றே. (16)

ஏழாவதுகாண்டம்

முற்றிற்று.

இந்த ஏழாவது காண்டத்தில் கற்பமூலிகைகளையும் அறுசுவைகளட்டும் வகைகளையுஞ் சொல்லப்பெற்றது, இனி எட்டாவது காண்டத்தில் யோகஞானமுறைகளை சொல்லுவது காண்குக.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிரு காண்ட

வைத்தியம்.

எட்டாவது யோகஞான காண்டம் - 16

தெளிவான ஞானத்திற் காதிகாப்பு
சிற்றின்பம் பேரின்பஞ் சிவனுஞ்சத்தி
அழியாத சிவனும் வெள்ளைசிவப்பு சத்தி
அண்டமது பராபரனு மரிந்துபாரு
வளியான பிண்டமது சத்தியப்பா
மறைவுண்டு அடக்கிவிடு வெளிவிடாதே
ஒழியாத ஞானத்தை விரும்புவோர்க்கு
உண்மையுடன் அரன்வடிவை யுரைக்கக்கேளே. (1)

கேளப்பா முட்டையது பாருமாகும்
கிருபையுடன் உள்க்கருவோ சிவனுஞ்சத்தி
வாளப்பா யிதையரிந்தோன் ஞானிஞானி
வகையறிந்த ஞானியென்றால் பெருமைமெத்த
மீளப்பா கேள்ப்பவர்க்கு ஞானமெய்தும்
வீண்பேச்சு மூடருக்கு ஞானமேது
ஆளப்பா பேரின்பம் அறிவதேது
அழிந்தழிந்து பிரப்பதுவும் இன்பந்தானே. (2)

இன்பந்தான் ஞானத்துக் கேகுமார்க்கம்
இரப்பில்லை பிரப்பில்லை ஈசனாகும்
துன்பந்தா னில்லையப்பா துயரமில்லை
துக்கமில்லை பக்கமில்லை தோழனில்லை
அன்பான ஒருவர்மேற் சிந்தையில்லை
அன்னைபிதா தெய்வமல்லால் வேறேயில்லை
வன்மந்தானவர்மனது அறிந்தோரில்லை
மானிலத்திற் கோடியொன்று வருவார்பாரே. (3)

வருவாரே பெண்மீதில் நினைவுமில்லை
    வந்தாலுந் தாயென்று வணங்கிநிற்பார்
யருவாரே திருப்பதியை வணங்கமாட்டார்
    மன்னவரைக் கையெடுத்து வணங்கமாட்டார்
திருவான சிவன்பாதஞ் சிந்தைசெய்வார்
    சிறப்பான உலகத்தில் விருப்பங்கொள்ளார்
பொருளான பொருளரிந்து மனதில்வைப்பார்
    புதுமைகண்டோ மென்றுமவர் சொல்லார்பாரே. (4)

சொல்லாரே ஞானவெண்பா நூறுமுடிந்த
    சூஸ்திரத்தை யடக்கிவைத்துக் காணேனென்பார்
கல்லான தவர்மனது ஒருக்காலுந்தான்
    காணேனென்று பொய்ச்சத்தியஞ் செய்தேசொல்வார்
நல்லோர்க ளறுபத்து நாலுகோடி
    நல்முனிவ ரிஷிகள்சித்தர் சாஸ்திரமெல்லாம்
வெல்லுமென சூஸ்திரம்பன்னிரு காண்டங் காண்டம்
    விரிவில்லை நூற்றித்தொண் ணூற்றிரண்டுந்தானே. (5)

தானேகேள் பதினெண்பேர் சித்தர்சொன்ன
    சகலசாஸ் திரங்கள் தனி லெதைச்செய்தாலும்
தானேகேள் சாபமது தீர்க்கவேணும்
    சாற்றினேன் சாபங்கள் தீராவிட்டால்
தானேகேள் தவங்களுடனெல்லாம் போச்சு
    சட்டைமுனி செய்திகண்டு மறைத்துக்கொண்டார்
தானேகேள் போகருமே உழவுகண்டு
    சரிசெய்தார் நூல்தனைத்தவமுள்ளோனே. (6)

தவமுள்ளோ னுக்காற் கிடைக்கும்பாரு
    தானடக்கி அறுசுவையுங் களற்றுவான்காண்
சிவமுள்ளோ னுக்கால் செந்தூரமுண்பான்
    தேடிவைப்பான் கிட்டகுறைக் காரணுவான்
கவனமதில் வைபான்காண் நாட்டைத்தேடான்
    கண்டவர்க்குப் பயித்தியங்கள் கொண்டோனென்பான்
புவனமதி லவர்களெல்லாம் பெரியோரப்பா
    புண்ணியவா னொருவரையுந் தேடான்பாரே. (7)

தேடாமல் ரேசித்துப் பூரித்தேதான்
திரமாகக்கும் பித்து இருநேரந்தான்
வாடாம லிருந்திடுவான் மவுனிபோலே
மானிடரைக் கனவிலுமே மனதிற்கொள்ளான்
நாடாண்டோ ராஜுலுமடுத்து நில்லான்
நல்மொழியாய்ப் பேசியடிபணிந்து நிற்பான்
சூடான வார்த்தைகளைப் புகழமாட்டான்
சுந்தரமே உண்மையொரு ஞானஞ்சொல்லான். (8)

ஒருநாளு மரியாத மூடச்சாதி
உலுத்தருட சிற்றின்ப வகையைக்கேளு
கருவான சாஸ்திரத்தைத் தேடிவைத்து
கண்டமென்று தாராளமாகச் சொல்லான்
மருவுவான் அடிபணிவான் பெரியோரென்பான்
மையென் பரமெய்யென் பான்பலியாதப்பா
குருவென்பான் நானென்பான் தீட்சைகாணுன்
குருடனப்பா அவன்பேச்சை நம்பிடாதே. (9)

பேச்சப்பா சடைவளர்த்துக் காவிபூண்டு
பூணூல்கள் குண்டலமும் புலித்தோல்கொண்டு
வாச்சப்பா பொட்டணமும் யேடுமொன்று
மாத்திரைக்கோல் ஏந்தியெங்கும் நீருசாத்தி
சூச்சமொன்று இருக்குதென்பான் மனுடர்தன்னை
சொல்லாமல் மயங்கிவிழப் பண்ணிக்கொள்வான்
ஆச்சப்பா பணங்காசு வாங்கிக்கொண்டு
அருகலிபோ லிரவுதனில் மறைவான்பாரே. (10)

பாரப்பா யிப்படியே வெகுபேர்தானும்
பண்பாக வேடமது பூண்டுகொண்டு
ஊரப்பா திரிவார்கள் சித்தனென்று
உரைப்ப தல்லால் வேறொன்று மில்லையப்பா
சீரப்பா வாதமது செய்வேனென்று
செகமெய்க்க அரிதாரஞ் செம்பில்வைத்து
நீரப்பா அதனைஒரு புடமாய்ப்போட்டு
நிமிஷத்தில் பழுத்துதென்று சொல்வான்பாரே. (11)

சொல்லுவான் சோல்ணுப்பை தானும்வைத்து
துருசுதுத்தம் அரிதார பற்பமென்பார்
மெல்லுவான் வெருவாயை அவல்போட்டாப்போல்
வேறென்று மில்லைசஞ்சீவி யென்பான்
அல்லலதை நீக்கிவிடுந் தாம்பூரசுண்ணம்
அதிருஷ்ட ரோகத்துக் காகுமென்பான்
வல்லதொரு மருந்துனக்குத் தாரேனென்று
மயக்கியே காசுபறித் துண்பான்மட்டே. (12)

மட்டையென்று லவன்மட்டை யல்லவப்பா
மருந்துதின்போ னவனுக்கு புத்திவேணும்
சட்டையது பண்ணுமலிருந்து விட்டால்
தானேதான் சொல்லாம லோடுவான்பார்
திட்டமுடன் சோறுகறி கொடுத்துவந்தால்
செகத்திலுள்ள பேர்களையும் மயங்கச்செய்வான்
பட்டமரந் தளிர்க்குமோ பேயாபேயா
பாவியிவன் மருந்தினல் பலனுண்டாமோ. (13)

உண்டாகும் சிவயோகம் நூற்றைப்பாரு
உறுதிவரும் பாக்கியங்கள் மிகவுண்டாகும்
விண்டதொரு கொங்கணரும் கருவூரானும்
வெளியாக நூல்தோறும் சொல்லிவிட்டான்
கண்டதொரு சட்டைமுனி இருநூற்றீட்சை
கருவோடே வெளியாகச் சொன்னநூலை
அண்டர்களுங் கண்டுதான் மயங்கினர்கள்
அதைமூலர் கிழித்தெறிந்து போட்டார்பாரே. (14)

போட்டதொரு நூலதற்குப் பதிலாய்நானும்
பூவுலகோர் பிழைப்பதற்கு தீட்சைநூலை
தேட்டமுடன் மனேன்மணியாள் தீட்சைநூறும்
சிறப்பான பூசைவிதி இருநூற்சொன்னேன்
நாட்டமுட னதையறிந்து வாசியோகம்
நன்மையுடன் தினந்தோறும் வகையாய்ச்செய்து
பூட்டகத்தை தானறிந்தால் சித்தனுவான்
புகழ்பெற்று வாழ்ந்திடுவான் உலகிற்றானே. (15)

தானேதான் யோகமே தெரியவேணும்
சண்டாள ருறவதனைத் தள்ளவேணும்
மானனையா ளாசைதனை மறுக்கவேணும்
வையகத்திற் கற்பமது கொள்ளவேணும்
ஆனதொரு ஞானமதை யறியவேணும்
அம்புவியி னாசைதனை யகற்றவேணும்
ஞானமது பெறுவதற்கு எட்டாங்காண்டம்
நன்மையொடு சொன்ன பதினாறுமுற்றே. (16)

எட்டாவதுகாண்டம்

முற்றிற்று.

இந்த எட்டாவது காண்டத்தில் யோகஞான முறைகளைச் சொல்லப்பெற்றது. இனி ஒன்பதாவது காண்டத்தில் தீட்சை முறைகள் சொல்லுவது காண்க.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிரு காண்ட
வைத்தியம்.

ஒன்பதாவது தீட்சாவிதி காண்டம் 16

தயவாகத் தீட்சைவிதிக் காதிகாப்பு
தான்பாட வாராய்ந்து தெளிந்துபார்த்து
செயமான முப்பத்திரெண்டு தீட்சை
சித்திசெய்த பேர்க்கெல்லாம் ஞானசித்தி
சயமான பாவவினை யற்றுப்போகும்
சோதிசிவ பாதமதைக் காணலாகும்
நயமாக எந்தனுக்கு உபதேசித்த
நற்குமரன் திருவருளால் தீட்சைகாப்பே (1)

தீட்சை 32.

தீட்சையிலே முதற்றீட்சை சிவதீட்சைதான்
ஸ்ரீம் அம் ஓம் மென்று லட்சஞ்செபித்து வோதக்
காட்சிபெறத் தேகமெல்லாம் வியர்வைகாணும்
கணமாய்கை யில்லையடா கண்டுதேறு
ஆச்சுதடா சிவதீட்சை ரெண்டுகேளு
ஆம் ஓம் ஹரீம் ரீம் மென்று நீயும்
மூச்சடா உள்ளடங்கும் லட்சமோத
முத்தியுண்டாஞ் சத்தியுண்டாஞ் சித்தியாமே. (2)

சித்தியாஞ் சிவதீட்சை மூன்றுகேளு
செப்புவேன் குரேம் ஸ்ரீம் றீம றீம் நம் மென்றுலட்சம்
பத்தியாய்ச் செய்துவர மோக்ஷமாகும்
பானுவைப்போற் தேகமெல்லா மொளிவுமாகும்
துத்தியஞ்செய் சிவதீட்சை நாலுகேளு
துடியுடனே ஸ்ரீங் றீங் அங் உங் கென்று
முத்திபெற லட்சமுருச் செபித்தார் சித்தி
மோக்ஷமப்பா தேவதைகள் பணியுந்தானே. (3)

பணிந்துதான் சிவதீட்சை அஞ்சுங்கேளு
பன்பாகயங் வங் றீங்கென்றுந்தான்
துணிந்தோதுலட்சமுரு செபித்தாற்சித்தி
தொண்டுசெய்வார் தேவதைகள் சட்டைகக்கும்
அணிந்துகொள்வாய் சிவதீட்சைஆறுகேளு
அன்புடனே சங் ரங் உம் ஆம் யென்றுலட்சம்
குனிந்துநிமிர் தேகமதில் வாசம்வீசும்
குணமாகுந் தேகசித்தி சுருக்குத்தானே. (4)

தானேசெய் சிவதீட்சை ஏழுநீயும்
சந்தோஷமாயோது இங் ரங் அவ்வு மென்று லட்சம்
மானேந்து மீஸ்பரனுமருகில் நிற்பார்
வானவர்கள் மகிழ்வாக வாவென்பார்கள்
கானென்ற தீட்சையெட்டும் உற்றுக்கேளு
நன்றாக மங் றீங் ரார வென்று லெட்சம்
ஆனந்தமுண்டாகும் தேவர்வந்து
அன்பாக உனைச்சேர்ந்து அனைவார்பாரே. (5)

உனைச்சேர்வார் சித்தர்களுஞ் சிவனார்தீட்சை
ஒன்பதுதான் வங் கிலியும் சிங் அம் ஐம் என்றுலட்சம்
வினையொழிந்து உன்தேகங் கல்போலாகும்
மெய்யான சட்டையொன்று தள்ளிப்போடும்
தினந்துதிக்குஞ் சிவதீட்சை பத்தைத்தானுஞ்
செப்பார்கள் செப்புகிறேன் வம் வும் அம் இம் யென்று
எனைப்போலே சொல்லார்கள் தேகம்பொன்னும்
இனிதான சிவதீட்சை ஓதினேனே. (6)

ஓதியதோர் சிவதீட்சை பதினொன்றுந்தான்
உரைக்கிறேன் மங் றீங் றீங் கென்று லட்சம்
பாதிமதி சடைக்கணிந்த சிவனார்பாதம்
பணிந்துதொண்டனா யிருப்பாய் செய்துபாரு
நீதிபெறும் பன்னிரண்டாஞ் சத்திதீட்சை
நிலைத்தவர்க்குத்தற்புருஷம் வம் ஆம் ஈம் என்றுலட்சம்
சாதித்துச் செபித்திடவே சித்தியாகும்
சட்டையொன்று தள்ளுமடா கெவுனமாமே. (7)

ஆமப்பாசத்தி பதிமூன்றாந் தீட்சை
அறிவுடனே ஊம் ஆம் மென்றேலட்சம்
நாமப்பா செபித்திடவே வச்சிரதேகம்
நமனுமிவன் கிட்டவந்து அணுகான்பாரு
ஊமப்பா பதினாலாஞ் சத்திதீட்சை
உண்மையாம் றம் றாம் ஸ்ரீம் அவ்வு மென்று
தாமப்பா லட்சமுரு செபித்தாற்சித்தி
சாயுட்சிய பதம்பெறுவார் சார்ந்துகேளே. (8)

சார்ந்துகேள் பதினைந்தாஞ் சத்திதீட்சை
தயவாக ஸ்ரீம் றீம் றீம் ஓம் மென்று லட்சம்
தேர்ந்துபார் தேகமுந்தான் கல்போலாகும்
சிவசிவா நாதவிந்து கட்டிப்போகும்
ஆய்ந்தவர்க்குப் பதினாறாந் தீட்சைகேளு
அப்பனே சங் இங் றங் கென்றேலட்சம்
மாந்தளிர்போல் தேகமுள்ள மனோன்மணியாள்
வருவாளே மகனென்று பணிந்துகொள்ளே. (9)

வாய்ப்பான பதினேழாஞ் சத்திதீட்சை
வழுத்துவேன் றீங் றீங் ஸ்ரீம் ஸ்ரீம் என்றே லெட்சம்
காய்ப்பான நரைதிரையு மில்லையில்லை
கற்பமதை யுண்டிடவே சுருக்குமெத்த
ஏய்ப்பார்கள் ஏய்ப்புக்குள் ளகப்படாதே
ஈஸ்பரியாள் தீட்சைபதி னெட்டுங்கேளு
தீய்ப்பான சங் சிங் ரார வென்று
செபித்திடுநீ லட்சமுரு சட்டைபோமே. (10)

சட்டைதள்ளும் பத்தொன்பதாந் தீட்சைதன்னை
தான்கேளு திரிநேத்திராயா வாவா வென்று
இட்டமுடன் லட்சமுரு செபித்தாற்சித்தி
இருபதாந் தீட்சையது ஸ்ரீங்கார தேவாய நம:வென்று
தொட்டதுவே லட்சத்திற் சித்தியாகும்
சொல்லுவேன் மூவேழு தீட்சைகேளு
அட்டதிசை வெல்லுமடா இங் அங் றங் கென்றுந்தான்
ஐநான்கு தீட்சைரெண்டும் அறையக்கேளே. (11)

அறையக்கேள் அரி அரிஓம் என்றுவோத
அப்பனே லட்சத்திற் சித்தியாகும்
முறைமையாக இருபத்திமூன்றாந் தீட்சை
மொழிந்திடுவாய் ராராரா றீம் றீம் பென்று
குறையாமற் செய்துவிடு சித்தியாகும்
குணமாக மூவெட்டுத் தீட்சைகேளு
மறைவாக லீலீ லி அரஹா றீறீ றி யென்று
வாழ்த்துவாய் லட்சமுரு கெவுனிப்பாயே. (12)

கெவுனமது ஓடவென்றால் ஐயைந்துதீட்சை
கேளுநீ ஏஏஏ ஊஊஊ வென்றுலட்சம்
மவுனமது சித்தியப்பா மிருபத்தாறில்
மாதாவின் தீட்சையது இஷாய இஷாய ஓம்மென்று லட்சம்
சிவனுகு மிருபத்தேழ் தீட்சைதன்னில்
செப்புவேன் ஓம் சிவாய கிவா றீங் கென்றுலட்சம்
புவனமதி லிருபத்தி யெட்டாந்தீட்சை
பூரிப்பாய் சிவஓம் சிவாயநம வென்னப்புகழுண்டாமே(13)

புகழுண்டாம் இருபத்தி ஒன்பதாந் தீட்சை
போற்றுவாய் சவ்வும் மவ்வும் மென்று லட்சம்
நெகிளாது அய்யாரு தீட்சையப்பா
நிலைத்தவர்க்கு மங் சங் கங் கென்று லட்சம்
அகமகிழ உன்தேகம் ஒருநாளுந்தான்
அழியாது நரைதிரையு மில்லையில்லை
உகம்வரைக்கு மிருத்துமடா முப்பத்தொன்று
ஓதுவாய் ஸ்ரீங் றீங் கென்று தானே. (14)

என்றுதான் லட்சமுரு செபித்தாற்சித்தி
இறவாமலிருக்துமடா கோடிகாலம்
நன்றுகாண் முப்பத்திரெண்டாந் தீட்சை
நங் கிலி சிங் கிலி யென்றே லட்சம்
மன்றுள்ள காலம்வரை இருத்துந்தேகம்
வாழ்த்திநீ தோத்திரங்கள் செய்துகொள்வாய்
கொன்றாலும் வாள்கொண்டு வெட்டினாலும்
குறையாமல் வாள்வெட்டுப் பொருந்துந்தானே. (15)

பொருந்துமே வயணமது தீட்சையோதப்
புகலுமீவன் கங் கங் கணபதி சர்வ சூரிய நமாவென்று
இருந்து லட்சமுரு செபிக்க ஈசனாவாய்
இயல் மனோன்மணி தீட்சை நூறும்பாரு
வருந்தியே யிதுமுப்பத்தி ரண்டுதீட்சை
மனிதரவர் செய்வாரோ மகான்கள் செய்வார்
அருந்துவாய் பெண்ணமிர்தம் உண்டுதேறு
அன்பான தீட்சைபதினாறு முற்றே. (16)

ஒன்பதாவது காண்டம்
முற்றிற்று.

இந்த ஒன்பதாவது காண்டத்தில் தீட்சைவிதிகளைச் சொல்லப்பெற்றது. இனி பத்தாவது காண்டத்திற் சாபநிவர்த்தி சொல்லுவது காண்க.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் பன்னிருகாண்ட

வைத்தியம்.

பத்தாவது சாபநிவர்த்தி காண்டம் -16

ஆந்தரிகமான மனோன்மணியே காப்பு
அன்பாக செந்தூர சுண்ணஞ்செய்து
சாந்தமாய்க் கற்பமுண்ண சீரந்தங்கம்
தயிலமுதற் பாஷான மருந்துக்கெல்லாம்
பாந்தமாய்ச் சாபமது தீர்க்கவேணும்
பக்குவமாய்ச் சாபமது நிவர்த்தி செய்ய
மாந்தரிக பீஜத்தை இதிலே சொன்னேன்
வகையோடே மந்திரத்தை உருத்தான்போடே (1)

நவக்கிரக சாப நிவர்த்தி

உருவாகச் சித்திசெய்வாய் அருக்கன்சாபம்
உத்தமனே-அம்-ஹ்ரீம்-யென்று லட்சம்
திருவாகச் செபித்துவர சாபந்தீரும்
ஜெயம்பெற்ற சந்திரனர் சாபந்தீர
அருவாக ஹ்ரீம்-உறீம்-யென்று லட்சம்
அன்பாகச் செபித்துவரச் சாபந்தீரும்
நிருவாகமான செவ்வாய சாபந்தீர
ஸ்ரீம் றீங் நசி மசி யென்று லட்சம்போடே (2)

என்றுநீ புதன்சாபம் தீரக்கேளு
இன்பமுடன் வங் யங் நசி மசி யென்று லட்சம்
நன்றுஉருச் செபித்திடவே சாபந்தீரும்
நாட்டமுள்ள குருசாபந் தீரக்கேளு
அன்றுநீ ஸ்ரீம் றீம் நசி மசி யென்று லட்சம்
அன்பாகச் செய்தாக்கால் சாபந்தீரும்
இன்றுநீ சுக்கிரன்றன் சாபங் கேளு
இறீம் றீம் நசி மசி யென்றே போடே (௩)

போடுவாய் சனிபகவான் சாபம்போக
புகழாக ஸ்ரீம் றாம் றாம் யென்றுசொல்லி
தேடுவாய் லட்சமுருப் போடத்தீரும்
திறமான இராகுவுட சாபந்தீர்க்க
நாடுவாய் அரீம் ஸ்ரீம் நசிமசி யென்றுலட்சம்
நலமாகச் செய்துவரச் சாபந்தீரும்
சாடுவாய் கேதுவுட சாபந்தீர்க்க
சரியாக அங் சிங் நசிமசி யென்றுலட்சம்
நீடுவாய் குளிகனுட சாபந்தீர்க்க
நிட்சயமாய் ஓம்ஐயும் ஐயு மெனத்தீர்ந்துபோமே. (4)

தீர்ந்துவிடும் உடல்சாப மிதுதானப்பா
சித்தர்கள்தம் சாபமது அரிஹரிஓம் சித்ததேவா நசிமசி யென்று
ஓர்ந்துமே லட்சமுருச் செபிக்கத்தீரும்
ஒன்பான நவசித்தர் சாபந்தீர
ஆர்ந்துசெய் ஆஆ ஈஈ ஊஊ ஏஏ ஐஐ யென்று
அருமையுட னுருலட்சஞ் செபிக்கத்தீரும்
தேர்ந்துகரை யேறுதற்கு மந்திரஞ்சொன்னேன்
சிறப்பாகச் செபித்தாக்காற் சித்தியாமே. (5)

சித்தியாம் மூலிகையைப் பறிக்குமுன்னே
சிறப்பாகச் செடிமுன்னே நின்றுகொண்டு
பத்தியுடன் ஓம்மூலி சர்வமூலி உயிர்மூலி
பரிவாயுன்னுயிர் உடலில்நிற்க சுவாகாவென்று
நத்தியே பதினெந்து உருவேபோட
நலமானசாப விமோட்சனந் தானாகும்
பத்தியுடன் பாஷாண சுண்ணச்செந்தூரம்
பாங்காகப் புடமிடுமுன் சாபங்கேளே. (6)

கேளப்பா பாஷாண சாபந்தீர
கிருபையுடன் ஓம் ஹீம் நசிமசி யென்று
வாளப்பா ஆயிரத்தெட்டுருச் செபிக்க
வலியான பாஷாண சாபந்தீரும்
கோளப்பா ஒன்றுமில்லை உப்பின்சாபங்
குறிப்பாக ஹரிஓம் றீம் நசிநசி யென்று
நாளப்பா நூத்தியெட்டு உருப்போடத்தான்
நாடாது சாபமெல்லாம் விலகிப்போமே. (7)

போமேதான் உபாசத்தின் சத்தைச்சேர்த்துப்
புகழான ரசவாதஞ்செய்யும்போது
ஆமேதான் ஓம் றீம் மசிசசி யென்று
அன்பாக ஆயிரத்தெட்டுருச் செபித்தால்
ஆமேதான் உபாசத்தின் சாபம்போச்சு
மகிழ்வாக போகமது புரியவெண்ணில்
தாமமுடன் வங் யங் நங் மங் சிங் கசிகசி யென்றுலட்சம்
தான்செபிக்கச் சாபம்போம் சூஸ்திரம்பாரே. (8)

சூஸ்திரமாம் பன்னிரண்டு காண்டமப்பா
சுருக்கமாய்ப் பதினாறு பதினாறாக
நேத்திரம்போல் வைத்தியங்கள் பதினாறாகும்
நிலைத்ததொரு வாதவித்தை பதினாறாகும்
சீத்தினமாம் சுண்ணமது பதினாறாகும்
நேர்மையுள்ள செந்தூரம் பதினாறாகும்
சாத்திகமாம் பற்பமுறை பதினாறாகும்
தைலமுறை யற்புதமாம் பதினாறாமே. (9)

ஆமேதான் கற்பமுறை பதினாறாகும்
அடையோக ஞானமது பதினாறாகும்
தாமேபார் தீட்சைவிதி பதினாறாகும்
சாபங்கள் தானிவர்த்தி பதினாறாகும்
நேமமுள்ள ஜாலமது பதினாறாகும்
நியமமுள்ள மாந்திரீகம் பதினாறாகும்
வாமமுள்ள சூஸ்திரங்கள் பன்னிரெண்டும்
மகிழ்வாகக் கிடைத்தாக்கால் சிவன்றான்பாரே. (10)

பாரப்பா சாபமது தீர்க்கவேணும்
பரிவான மூலிகையின் சாபந்தீரும்
காரப்பா சுண்ணசெந்தூர பற்பம்
கற்பமுறை செய்யவென்றால் சாபந்தீரும்
நேரப்பா வாதவித்தை வைத்தியங்கள்
நேர்மையுடன் செய்யவென்றால் சாபந்தீரும்
சேரப்பா கற்பங்கள் தைலம் ஜாலம்
தீட்சைகளுஞ் செய்யவென்றால் சாபந்தீரே. (11)

தீரேநீ ஜாலமுடன் மாந்திரீகம்
செய்வதற்கு முனிசாபந் தீரவேணும்
நேரேநீ யோகஞானங்கள் செய்ய
நேர்மையுடன் சாபமது தீர்க்கவேணும்
பாரேநீ எம்மருந்து முடித்திட்டாலும்
பார்வதியாள் வயிரவன்றன் பூஜைவேணும்
காரேநீ விரதமதை விட்டிடாதே
கண்மணியே சாபமதை நிவர்த்திசெய்யே. (12)

செய்யவே விட்டகுறை யிருக்கும்போது
தீர்க்கமுடன் உடல்சாபம் நிவர்த்திசெய்தால்
ஐயமுள்ள மூலிகைகள் கண்ணிற்காணும்
அப்போது ரசவாதம் பலிதமாகும்
பொய்யல்ல உடற்சாபந் தீராமற்றான்
போய்த்தேடித் திரிந்தாலுங் கண்ணிற்காணு
மெய்யாகக் கண்டிட்டோ மென்றுசொல்வார்
வீணிலவர் பேச்சைநம்பி யலைந்திடாதே. (13)

நம்பியிந்த சூஸ்திரத்தை யடக்கிவைத்து
நன்றான தண்டகமாம் நூற்றைப்பாரு
நம்பிநீ சிவப்புநிறச் சனிகைபார்த்து
நன்மையுடன் நீவணங்கிப் பூஜைசெய்து
நம்பியே கொண்டுவந்து இல்லம்வைத்து
நல்லதொரு கற்பூரச் சுண்ணந்தன்னை
நம்பியே சனிகைக்கு உள்ளேயேத்த
நயமான அமுர்தமங்கே யிறங்கும்பாரே. (14)

இறங்கினதைப் பீங்கானி லேந்திவாங்கி
இனிதான கற்பூரச் சுண்ணம்போடு
உறங்காமற் பனிநீர்போல் தெளிந்துநிற்கும்
உத்தமனே குப்பியிலே யடைத்துக் கொண்டு
திறங்காணுந் தேவிமனோன்மணியின்முன்னே
சிந்தைமகிழ்வாக வைத்துப் பூஜைபண்ண
அறங்காக்கு மீஸ்வரியா ளெடுத்துஉன்னை
அணைத்தமுது தந்திடுவாள் வாங்குவாயே. (15)

வாங்கிநீ உண்டிடுவாய் அமுதகற்பம்
மைந்தனே தேகம்பொன் னாகும்பாரு
ஏங்கிநீ யலையாதே யநேகசித்தர்
எடுத்தவித்தை பலியாத தேதுனாலே
ஓங்கியதோ ரமுதமது புசிக்காமற்றான்
உண்மையுடன் தான்புசித்தார் போகநாதர்
தாங்கியே சொன்னபடி செய்தாற்சித்தி
சாபந்தான்தீர்த்த பதினாறு முற்றே. (16)

பத்தாவது காண்டம்

முற்றிற்று.

இந்த பத்தாவது காண்டத்தில் சாபநிவர்த்தி முறைகளைச் சொல்லப் பெற்றது. இனி பதினோராவது காண்டத்தில் ஜாலங்களும் வைத்தியங்களும் சொல்லுவது காண்க.

உ

பராமபதி துணை.

அகஸ்தியர் பன்னிரு காண்ட

வைத்தியம்.

பதினோராவது ஜாலகாண்டம் - 16

ஆதிமூலத் துதித்த ஐங்கரனே காப்பு
    ஐந்தெழுத்து மெட்டெழுத்து மனுதிகாப்பு
ஜோதிசிவ னருகில்வளர் ஆத்தாள்காப்பு
    சொற்பெரிய நாதாக்கள் சுருதிகாப்பு
நீதிபெறு மண்டபிண்டம் நிறைந்தோன்காப்பு
    நிமலகுரு பரனுன குமரன்காப்பு
பாதிமதி சடைக்கணிந்த சிவனுர்காப்பு
    பாடினேன் சாஸ்திரங்கள் கோடாகோடி (1)

கோடான கோடிசாஸ் திரங்களுக்கும்
    குருமுறையை யிதிலேதான் சொல்லிவிட்டேன்
சோடாக ஆயிரத்தி இருநூறப்பா
    சொல்லினேன் ஜாலகாண்டம் இரண்டுநூல்கள்
ஆடவர்க ளறியாது மறைத்துவைத்தேன்
    அன்பான ஜாலமப்பா வசியமாகும்
நீடான வேசரிதான் பேடும்அன் றில்
    நேசித்து இறங்கையிலே அருவிபோலே (2)

அருவியது விழுகுமடா மோருபோலே
    அதைப்பீங்கான் தனில்வாங்கி வைத்துக்கொண்டு
குருவான ஈப்புலியும் ஈயும்போட்டு
    கூடவே ஐவிரலிச் சாறும்விட்டு
திருவாக மத்திக்க மெழுகுமாகும்
    திகைப்பூடு சுழல்வண்டு மின்மினியும்
அருவுருவா யஞ்சாறு கூடச்சேர்த்து
    ஆடையொட்டி நிலப்பனை விளாவுஞ்சேரே. (3)

சேர்த்தப்பா ஒன்றாக அரைத்தெடுத்து
சிமிளில்வைத்து வேர்க்காமல் காற்றுடாமல்
சாத்தியமாய் மோகினியை லட்சமுருவோதி
சனிகைக்கு தீனியிமேல கூடச்சேரு
பார்த்திபனே திலதமிட்டு மேலேபூசிப்
பண்பாகத் தியானிக்கச் சனிகைதானும்
ஆர்த்தியுடன் சொன்னபடி தானுங்கேட்கும்
அப்பனே சொல்லிவிட்டே னினிதாய்க்கேளே. (4)

கேளுநீ எலுமிச்சை முருங்கைதேக்கு
கிருபையுடன் அவுரிமருதோன் றிநாவல்
வாளுநீ செவ்வகத்தி மஞ்சணத்தி
வனர்வேங்கை வகைப்பட்டை வகையாய்ச்சுட்டு
ஆளுநீ பனிநீரிற் கரைத்துக்காய்ச்சி
அப்பனே இதிலிருந் துப்பெடுத்து
மீளுநீ கரியுப்பு உவரினுப்பு
வெடியுப்பு அழலுப்பு கல்லுமுப்பே. (5)

கல்லுப்பு வலையலுப்பு யிந்துப்புத்தான்
கருத்துடனே அமுரியுப்பு சவுட்டினுப்பு
வெல்லுமே உப்புவகை ஒன்பதாகும்
வீரமுடன் பூரமொடு காரசாரம்
வல்லவனே அரிதாரம் லிங்கஞ்சூதம்
மஞ்சளென்ற கெவுரிவெள்ளைப் பாஷாணந்தான்
சொல்லரிய ஒன்பதுந்தா னின்னங்கேளு
ஜோதியாந் தங்கம்வெள்ளி செம்பினோடே. (6)

செம்புடனே வெள்வங்கம் கருவங்கம்நாகம்
திறமான உருக்கிரும்பு காந்தஞ்சேரு
அன்புடனே இதுவெல்லாஞ் சுத்திசெய்து
அறிவாக வகைவகையாய்க் களஞ்சிவீதம்
பண்புடனே களஞ்சிபது முப்பத்தாறும்
பதிவாகச் சேர்த்தெடுத்து வைத்துக்கொண்டு
இன்பமுடன் கெந்தகமுஞ் சரியாய்க்கூட்டி
எடுத்துகுழி க்கல்லதனில் வைத்துக்கொள்ளே. (7)

வைத்திடுவாய் குயப்பாலிற் சாமமொன்று
வகையுடனே பழச்சாறு சாமமொன்று
சித்தமதாய்க் கற்றாலம் பாலிற்சாமம்
சீரான எருக்கம்பால் தன்னிற்சாமம்
வைத்திடவே வெடியுப்புச் செயநீர்சாமம்
வளமான பொற்கையான் சாற்றிற்சாமம்
சுத்தமாம் வேங்கையுப்புச் செயநீர்சாமம்
சுகமான பன்னீரில் சாமமொன்றே. (8)

ஒன்றான சவ்வீரச் செயநீர்சாமம்
ஒன்பதுநீர் ஒன்பதுதான் சாமமாட்டி
நன்றாக வில்லைதட்டிக் காயவைத்து
நாலுநாள் தானுலர்த்திச் சட்டிக்குள்ளே
குன்றாமல் வைத்துநீ ஓடுமூடி
குணமாக அஞ்சுசுண்ண மண்ணுஞ்சேர்த்து
நன்றான ஆகாசத்தூள் சேர்த்தாட்டி
நலம்பெறவே சீலைமண் ணுந் தானேசெய்யே. (9)

செய்யவே ஆத்தாளைப் பூஜைபண்ணித்
திடமாக வயிரவனைத் தியானஞ்செய்வாய்
கைமுறையா யாவரையின் விறகுனாலே
கமலம்போ லெரித்திடுவாய் ஆறுசாமம்
பொய்யாது செந்தூரம் முருக்கம் பூப்போல்
பூஜைசெய்து தானெடுத்து வைத்துக்கொள்ளு
மெய்யான செந்தூரம் நோய்க்கெல்லாந்தான்
விபரமாய்ச் சொல்லுகிறே னறிந்துபாரே. (10)

பாரப்பா வாதத்தி லெழுந்தநோய்க்கு
பரிவான அனுப்பானஞ் சொல்லக்கேளு
பாரப்பா வேப்பெண்ணெய் பணவிடையிற்கொள்ளு
பத்தியங்கள் நினைவாகக் கார்த்தேயுண்ணப்
பாரப்பா சூலைபதி னெட்டுந்தீரும்
பரிசுகெட்ட கால்கைகள் முடக்கந்தீரும்
பாரப்பா மேல்நடுக்கந் தலைநடுக்கம்
பண்பான கைநடுக்கம் பறந்துபோமே. (11)

போமப்பா பித்தத்தி லெழுந்தநோய்க்கு
புகழிஞ்சிச் சாற்றினிலே பணவிடையேதாக்கு
ஆமப்பா பாண்டுவகை யெட்டுந்தீரும்
அதினுடைய வாயுவெல்லா மற்றுப்போகும்
போமப்பா குட்டம்பதி னெட்டுந்தீரும்
புத்துகளும் பித்தமெலாம் பொடிந்துபோகும்
நாமப்பா மூலமுளை யாணிதீரும்
நாசிப்பிணி சந்தனக்கு காட்டிப்பாரே. (12)

காட்டிலே சிலேற்பனத்தி லெழுந்தநோய்க்கு
நலமான தேனிலுண்ணப் பணவிடைதானப்பா
பூட்டிவைத்த தொண்டையுள்ள கட்டுந்தீரும்
பொல்லாத மயக்கமஞ்சு வலிதானஞ்சு
ஓட்டிவிடப் பைத்தியமும் புலப்பந்தீரும்
உடலிலுள்ள நோயெல்லா மொழிந்துபோகும்
தாட்டிமைகள் பேசாதே தண்மையாகும்
சத்தியமாய்க் கைமுறைகள் தவரிடாதே. (13)

முறைதவரா திருந்துவிடு அரனாணை
முந்திவந்த புத்திரற்குச் சொல்லவேணும்
கரைகண்ட மருந்திதுதான் எல்லாநோய்க்கும்
கருவான செந்தூரங் கண்டுகொள்ளு
மறைவாக வைத்திருந்து உண்டுவாநீ
வயிரமடா நரைதிரையு மில்லையில்லை
துரையான சாஸ்திரத்துக் கெல்லாமிந்த
சூஸ்திரத்தி லடக்கிவைத்தேன் தேறுவாயே. (14)

தேறுவாய் அறுசுவையுந் தள்ளிப்போடு
திறமாகச் சாபமதை நீக்கிப்போடு
கூறுவாய் தீட்சையது வகைக்குலட்சம்
குணமாக வோதியே தாயைப்பூசி
மாறுவாய் நாற்பத்தி முக்கோணபூஜை
வகையோடே ஐம்பதினிற் சொன்னேன்பாரு
தேறுவாய் வயிரவனைப் பூஜித்துய்ய
தீராத நோய்தீரும் தீர்க்கந்தானே. (15)

தீர்க்கந்தான் வேணுமப்பா ஞானத்துக்கு
        தீட்சைபெற்று கற்பமுண்டால் ஞானந்தங்கும்
ஆர்க்குமடா நாதசத்தி சிவமேவிநது
        அடிமுடிதா னிதுவப்பா அரிந்தோன்சித்தன்
மூர்க்கமுள்ள ரசங்கெந்தி அடிமுடியுமாகும்
        முறையோடே தண்டகமாம் நூற்றைப்பாரு
ஏர்க்கையுடனே சொன்ன ஜாலகாண்டம்
        இனிதான பாடல்பதினாறு முற்றே. (16)

பதினொருவது காண்டம்

முற்றிற்று.

இந்தப் பதினொருவது காண்டத்தில் ஜாலமுறைகளைச்சொல்லப்பெற்றது, இனிப்பன்னிரண்டாவது காண்டத்தில் மந்திரங்களை விரித்துச்சொல்லும்.

உ

பரமபதி துணே.

அகஸ்தியர் பன்னிரு காண்ட

வைத்தியம்.

பன்னிரண்டாவது மந்திர காண்டம் - 16

வாலவயதான மனோன்மணியே காப்பு
மாந்தரிகஞ் சொல்லுதற்கு வாலை காப்பு
பாலவிநாயகர் வசிய மந்திரபீஜம்
பத்தியுடன் ஆ ஆ ஆ ஈ ஈ ஈ வென்று லட்சம்
ஞாலமுள்ள சுப்ரமண்யர் மந்திரபீஜம்
நாட்டமுடன் சரவணபவ உம் உம் அம் அம் என்றுலட்சம்
ஆலமுண்ட ஈஸ்வரனார் மந்திரபீஜம்
அன்பாக ஓ ஐ உ இ ஆ யென்றோதச் சித்தே. (1)

சித்தியாம் ஈஸ்வரியின் மந்திரபீஜம்
சிறப்பாக இடாயி இடாயி டாகினி டி டி டி றீங்கென்றும்
பத்தியாய் ருத்ரவசிய மந்திரபீஜம்
பரிவாக றங் அங் சங் றீங் கென்று லட்சம்
சுத்தியாம் மகேஸ்வரரின் மந்திரபீஜம்
சுகமாம் ஸிங் மங் அங் றீங் கென்று லட்சம்
முத்திதருஞ் சதா சிவத்தின் மந்திரபீஜம்
முறையொடு சிவயநம வென்றோது வாமே. (2)

ஆமப்பா மஹா விஷ்ணு மந்திரபீஜம்
அரிதான ஓம் நமோ நாராயணா வென்று லட்சம்
வாயப்பா சிவ வசிய மந்திரபீஜம்
வகையாக ஓம் றீம் நமா நமக வென்று லட்சம்
தாமப்பா பிரமாவின் மந்திரபீஜம்
சதிராக நங் கிலிங் சிங் மங் கென்று லட்சம்
நாமப்பா சரஸ்வதியின் மந்திரபீஜம்
நல்வாக்கு வாணி ஸ்ரீம் காயத்திரி யென்றுற் சித்தே. (3)

சித்தான சிதம்பரத்தின் மந்திரபீஜம்
செபித்திடுநீ நமசிவய வென்று லட்சம்
சத்தான ஸ்ரீராம மந்திரபீஜம்
சரதமொடு ஸ்ரீராம.ராம நம ஓம் யென்று லட்சம்
வித்தான மஹாலக்ஷ்மி மந்திரபீஜம்
விதரண ஸ்ரீம் ஐம் கிலிம் சௌம் யென்று லட்சம்
மூத்தான அஞ்சனா தேவி மந்திரம்
முறையுடனே றங் றங் றங் றீங் கென்று லட்சமோதே. (4)

லெட்சமாம் அனுமாரின் மந்திரபீஜம்
இதமாக ஓம் ராமதூதா அனுமந்தராயா நமகா வென்று லட்சம்
அச்சமிலா கருடனுட மந்திரபீஜம்
அன்புடனே ஓம் நம் லம் மம் லம் யென்றும்
இச்சையுடன் நீதான் சிம் லம் வம் யென்றும்
இனிமையுடன் லம் யம் லம் யென்று லட்சம்
பச்சமுடன் வாலை மந்திர வசிய பீஜம்
பரிவாக ஹரி ஓம் நமகா வென்றோதே. (5)

ஓதவே பகவதியின் மந்திரபீஜம்
உமை ஹ்ரி பகவதி சுவாத்திரி ஓம் யென்று லட்சம்
நீதமுள்ள திரிபுரையாள் மந்திரபீஜம்
நியமமுடன் ஓம் றீங் ஸ்ரீம் நமகா வென்று லட்சம்
பேதமில்லா வாராகியின் மந்திரபீஜம்
பிரியமொடு அங் உங் றீங் கென்று நல்ல
சாதகமாய் ஐயும் கிலியும் சௌம் யென்று லட்சம்
சரியாகச் செபிக்க மனதுரையுங் காணே. (6)

உரைக்கிறேன் காளியின் மந்திரபீஜம்
ஓம் ஆம் காளி வா வா வென்று லட்சம்
கிரைக்கு மோகினி மந்திர வசிய பீஜம்
கோராக ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் மோகினி வென்று லட்சம்
வரைப்பிலா ஜின்னுமந்திர வசிய பீஜம்
வடிவான ஓம் நீலி கபாலி திரி சூலி யென்று லட்சம்
மரைப்பிலா தேசெபிக்கச் சித்தியாகும்
வாகான ஜின்னுவுந்தான் வசிய மாச்சே. (7)

ஆச்சப்பா வீரபத்திரர் மந்திரபீஜம்
    அகோராயா வீரா புர புர அரி அரி யென்றும்
பாச்சப்பா வீர வீர சங்காரா கால கண்டாயென்றும்
    பரிவாக வீர கோராயா வீ வீ வீ யென்று லட்சம்
கூச்சப்பா பைரவரின் மந்திரபீஜம்
    கூங் காங் கெங் சங் சங் கென்று லட்சம்
மாச்சலிலா தேயுருவைச் செபித்து வந்தால்
    வயிரவருந் தெரிசனைக்கு வருவார் சார்ந்தே. (8)

சாந்தமுடன் கிங்கிலியன் மந்திரபீஜம்
    சரிசாகப் புறேம் புறேம் கிங்கிலியா வென்றும்
மாந்தரிகம் சங்கு வங்கு யங் வென்றும்
    மன்னு சிவாயநம நமசிவய வென்றும் லட்சம்
ஏந்தலெனும் மாடனது மந்திரபீஜம்
    இயல்புடனே அவ்வும் உவ்வும் யென்று மிக்க
பாந்தமுறவே யங் கிஷமாடா வென்றும்
    பணிவாக லட்சமுரு என்றும் போடே. (9)

என்று நீமொட்டையனார் மந்திரபீஜம்
    இதமாகவே டாங் டாங் லிங் கிலீங் கென்றும்
நன்று நீ அரி அரி ஓம் யென்று லட்சம்
    நயமுடனே தான் செபிக்கச் சித்தியாகும்
அன்று காட்டேரி தேவதைகள் தன்னை
    அன்புடனே வசப்படுத்த மந்திரபீஜம்
இன்று நீ ஓம் லிங் வங் டங் கென்று லட்சம்
    இசைபெறவே செபித்திட நற்சித்தியாமே. (10)

ஆமப்பா இருளனுட மந்திரபீஜம்
    ஆூ ஆூ ஊ ஊ அம் அம் அவ்வும் ஒவ்வும் யென்றும்
தாமப்பா உம் உவ்வும் ஆூவாவா வென்றும்
    தனியாக லட்சமுருச் செபிக்கச்சித்தி
நாமப்பா அரசனுட மந்திரபீஜம்
    நலம்பெற அர அர அர சம் பம் வா வென்றும்
வேமப்பா பல வீரா அகோர பரதேவா வென்றும்
    வினயமொடு லட்சமுருச் செப்பு வாயே (11)

செப்புவேன் பிசாசு பேய்களை யோட்டத்தான்
சிறப்பான மந்திரபீஜத்தைக்கேளு
ஒப்புர ஓம் எவா எவா மங் சிங் கென்றும்
உயர் தம்பய தம்பய பம் பம் நமகா வென்றும்
தப்புவாராதே லட்சம் உருச் செபிக்க
சரணடைந் தேயதி விரைவி லோடிப் போகும்
முப்புமுறை யோர்ந்தமகானிதையறிந்தால்
மூதண்ட மந்திரத்தை விடாதகள் பாரே. (12)

விடாதே நீசபைகட்ட மந்திரபீஜம்
விளம் புவன் கேள் அங் றங் மங் வங் கென்றும்
திடமாக ஷிங் மங் அங் மங் ஓம் பென்றும்
செப்புவாய் லட்சமுருச் செபிப்பா யானல்
கடமாம் மனிதருக்கும் சபையோருக்கும்
காட்டமுடனிருப்பவர்க்கும் பார்ப்பவர்க்கும்
இடமாகச் செய்ஜாலந் தெரியா மற்றுன்
இருத்து மிந்த மந்திரத்தினியல்பு பாரே. (13)

பாரப்பா அட்டதிக்குப் பாலகர்க்கு
பரிவான மந்திர பீஜத்தைக்கேளு
சீரப்பா வீட்சணிவா வா வீரா பார் பார் யென்றும்
சிறப்பாகப் புறோம் புறோம் றீங் கங் சிங் சிங் கென்றும்
கூரப்பா மங் டங் றீங் வங் வங் பங் கென்றும்
குணமுடனே றீ றீ றீ றீ கிறுங் கென்றும்
காரப்பா மங் ராங் ராங் வறீம் பம் வம் என்றும்
கணக்கு லட்சமுருச் செபித்து அடக்கஞ்செய்யே. (14)

அடக்குவாய் மந்திரத்துக் காதிகேளு
அன்புடனே ஓம் என்ற எழுததைச்சேரு
வடக்குமுகமிருந்து லட்சம் உருத்தான் போடு
மனமகிழ எத்தெய்வம் வேண்டு மோதான்
சடக்கென்று தேவதைபேர் மந்திரத்தோடே
தான் சேர்த்துச் செபித்திடத் தேவதைாணிற்கும்
படக்கெனவே அதைக் கண்டு பயங்கொள்ளாதே
பணிந்து நீகேட்டவரந் தருவார்பாரே. (15)

தருவணிகள் ஓமென்ற அட்சரத்துள்
சகலஜீவ தயாபரனுமிருற் குள்ளாச்சு
மருவில்லா சிவனயனர் மந்திரந்தானும்
வடிவான அட்சரத்துள்ளிருப்பதாச்சு
குருபரனும் விநாயகன்றன் சுழிதானப்பா
குவலயங்களுதிக்கு முன்னே பிறந்தமூலம்
திருவான விநாயகரின் சுழியை முந்தி
செபிப்பாய் நீ மந்திர காண்டம் பதினாறுமுற்றே. (16)

பன்னிரண்டாவதுகாண்டம்

முற்றிற்று.

அகஸ்தியர் பன்னிராயிர காண்டத்திற்கு சுருக்கம் பரிபூரண 1200 அதற்கு சுருக்கம் பன்னிருகாண்ட வைத்தியமென அகஸ்தியர் பரிபூரணம் 1200ரில் கண்டிருக்கிறது.

உ

பரமபதி துணை.

மந்திரகாண்ட வசனம்.

இதனடியிற்கண்ட மந்திரங்கள் மதுரை. மகான் குழந்தை வேலுப்பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஒலைச்சுவடியின்படி யெழுதிவைத்திருந்த பிரதியை வாடிப்பட்டிகனம் முத்துவேலுப் பிள்ளை யவர்கள் கையாண்டுவந்த பிரதியை வைத்துச் சரிபார்த்து அச்சிடப் பெற்றது.

ஆகையால் தங்களுக்கு எந்த இஷ்ட தேவதைகளை வசப்ப டுத்தி சித்திபெறவேண்டுமோ அந்தந்த தேவதைகளுக்குக் கூறி யுள்ள மந்திரங்களைப் பின் வருமாறு செபித்தாற் சித்தியாகும்.

சகல தேவதைகளின் வசிய

மந்திர பீஜாட்சர விபரம்.

விநாயகர் மந்திரபீஜம்.

ஓம் ஆ ஆ ஆ ஈ ஈ ஈ சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க விநா யகர்சித்தியாகும்.

சுப்பிரமணியர் மந்திரபீஜம்.

ஓம் சரவணபவ உம் உம் அம் அம் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க சுப்பிரமணியர் சித்தியாகும்.

ஈஸ்வரர் மந்திரபீஜம்.

ஓம் ஔ ஐ ஊ இ ஆ சுவாஹா வன்று லட்சமுருச்செபிக்க ஈஸ்வர சித்தியாகும்.

ஈஸ்வரி மந்திரபீஜம்.

ஓம் இடாயி இடாயி டாகினி டி டி டி றீங் சுவாஹா என்னு லட் சமுருச்செபிக்க ஈஸ்வரி சித்தியாகும்.

ருத்திர மந்திரபீஜம்.

ஓம் றங் அங் சங் றீங் சுவாஹா என்று லட்சமுருச்செபிக்க ருத் திரர் சித்தியாகும்.

மகேஸ்வரர் மந்திரபீஜம்.

ஓம் லிங் மங் அங் றீங் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க மகேஸ்வரர் சித்திபாகும்.

சதாசிவ மந்திரபீஜம்.

ஓம் சிவாயநம சுவாஹா என்று லட்சமுருச்செபிக்க சதாசிவ சித்தியாகும்.

மகாவிஷ்ணு மந்திரபீஜம்.

ஓம் நமோ நாராயணு சுவாஹா என்று லட்சமுருச்செபிக்க மகாவிஷ்ணு சித்தியாகும்.

சிவ மந்திரபீஜம்.

ஓம் றீங் நமா நமகா சுவாகா என்று லட்சமுருச் செபிக்க சிவமந்திரஞ்சித்தியாகும்.

பிரம மந்திரபீஜம்.

ஓம் நங் கிலி சிங் மங் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்கபிர்ம மந்திரஞ் சித்தியாகும்.

சரசுவதி மந்திரபீஜம்.

ஓம் வாணி ஸ்ரீம் காயத்திரி சுவாஹா என்று லட்சமுருச்செபிக்க சரசுவதி சித்தியாகும்.

ஸ்ரீ ராம மந்திரபீஜம்.

ஓம் ஸ்ரீராம ராம நம ஓம் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க ஸ்ரீராம மந்திரஞ் சித்தியாகும்.

ஸ்ரீமஹாலெட்சுமி மந்திரபீஜம்.

ஓம் ஸ்ரீம் ஐங் கிலிம் சௌம் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க ஸ்ரீமஹாலெட்சுமிமந்திரஞ் சித்தியாகும்.

அஞ்சணுதேவி மந்திரபீஜம்.

ஓம் றங் றங் றங் றீங் சுவாஹா என்று லட்சமுருச்செபிக்க அஞ்சணுதேவிமந்திரஞ் சித்தியாகும்.

அனுமார் மந்திரபீஜம்.

ஓம் ராமதூதா அனுமந்தராயா நமகா என்று லட்சமுருச் செபிக்க அனுமார் சித்தியாகும்.

கருட மந்திரபீஜம்.

ஓம் லம் மம் லம் சிம் லம் வம் லம் யம் லம் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க கருட மந்திரஞ்சித்தியாகும்.

வாலை மந்திரபீஜம்.

ஓம் ஹரி ஓம் நமகா சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க வாலை மந்திரஞ்சித்தியாகும்.

பகவதி மந்திரபீஜம்.

ஓம் ஹரி பகவதி சுவாத்திரி ஓம் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க பகவதி மந்திரஞ்சித்தியாகும்.

திரிபுரை மந்திரபீஜம்.

ஓம் ரீங் ஸ்ரீம் நமகா என்று லட்சமுருச் செபிக்க திரிபுரை சித்தியாகும்.

வராகி மந்திரபீஜம்.

ஓம் அங் உங் ரீங் ஐயுங் கிலியும் சுவாஹா சௌம் என்று லட்சமுருச்செபிக்க வராகி மந்திரஞ்சித்தியாகும்.

காளி மந்திரபீஜம்.

ஓம் ஆம் காளி வாவா சுவாஹா என்று லட்சமுருச்செபிக்க காளி மந்திரஞ்சித்தியாகும்.

மோகினி மந்திரபீஜம்.

ஓம் ஸ்ரீம் ஹரீம் மோகினி சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க மோகினி மந்திரஞ்சித்தியாகும்.

ஜின்னு மந்திரபீஜம்.

ஓம் நீலி கபாலி திரிசூலி சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க ஜின்னு மந்திரஞ்சித்தியாகும்.

வீரபத்திர மந்திரபீஜம்.

ஓம் அகோராயா வீரா புர புர அரி அரி வீர வீர சங்கார கால கண்ட வீரகோராயா வீ வீ வீ என்று லட்று முருச் செபிக்க வீரபத்திர மந்திரஞ்சித்தியாகும்.

பைரவ மந்திரபீஜம்.

ஓம் கூங் காங் கெங் சங் சங் சுவாஹா என்று லட்சமுருச் செபிககபைரவர் சித்தியாகும்.

கிங்கிலியன் மந்திரபீஜம்.

ஓம் புறேம் புறேம் கிங்கிலியா சங்கு வங்கு யங்கு சிவாயநம நமசிவய சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க கிங்கிலிய மந்திரஞ் சித்தியாகும்.

மாடன் மந்திரபீஜம்.

ஓம் அவ்வும் உவ்வும் அங்கிஷமாடா சுவாஹா என்று லட்சமுருச்செபிக்க மாடன் மந்திரஞ் சித்தியாகும்

இருளன் மந்திரபீஜம்.

ஓம் ஆ ஆ ஊ ஊ அம் அம் அவ்வும் ஒவ்வும் உம் உவ்வும் ஆவாவா சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க இருளன் மந்திரஞ் சித்தியாகும்.

அரசன் மந்திரபீஜம்,

ஓம் அர அர அர சம் பம் வா பலவீரா அகோர பரதேவா சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க அரசர் சித்தியாகும்.

பேய்பிசாசுகளை ஓட்டுதற்கு மந்திரபீஜம.

ஓம் ஏவா ஏவா மங் சிங் தமபய தம்பய பம் பம் நமகா என்று லட்சமுருச் செபிக்க பேய்பிசாசு ஓடிப்போகும்

மொட்டையன் மந்திரபீஜம்

ஓம் டாங் டாங் லிங் கிலிங் அரி அரி ஓம் சுவாஹா என்று லட்சமுருச்செபிக்க மொட்டையன் மந்திரஞ்சித்தியாகும,

அட்டதிக்குங் கட்ட மந்திரபீஜம்.

ஓம் விட்சனி வாவா வீரா பார் பார் புறோம் புறோம் றீங் கங் சிங் சிங் மங் டங் றீங் வங் வங் பங் றீ றீ றீ றீ கிறுங் கிறுங் மங் ராங் ராங் ஹ்றீம் பம் வம் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க அட்டதிக்குங் கட்டலாகும்.

காட்டேரி மந்திரபீஜம்.

ஓம் சிங் வங் டங் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க காட்டேரி மந்திரஞ் சித்தியாகும்.

சபைகட்ட மந்திரபீஜம்.

ஓம் அங் றங் பங் வங் சிங் மங் அங் மங் ஓம் சுவாஹா என்று லட்சமுருச் செபிக்க சபைகட்ட மந்திரஞ்சித்தியாகும.

மந்திரகாண்ட வசனம்

முற்றிற்று.

உ பரமபதி துணை.

வைத்திய சாஸ்திர விளம்பரம்.

இராமதேவர் மக்கத்திற்குச் சென்று யாக்கோப்பெனப் பெயர் பெற்றுச் சொல்லிய வாதவைத்திய சாஸ்திரங்கள்

(1) வைத்திய சிந்தாமணி 700-ம் அதன் சுருக்கமுஞ் சேர்ந்தது இதில் வைத்திய முறைகளும் வாதமுறைகளும் திராவக முறைகளும் சுண்ணச்செந்தூர முறைகளுஞ் சொல்லக்கூடியது. விலை 1—0—0

(2) சுண்ணக்காண்டம் 600 இதில் பாஷாணங்களும் உப்புகளுஞ் சுண்ணங்கள் செய்யக்கூடிய முறைகளைச் சொல்லப் பெற்றது. 0—14—0

(3) சுண்ணம் 300 பாஷாணங்களையும் லோகங்களையும் சுண்ணஞ் செய்ய வேண்டிய ரகசியங்களைச் சொல்லக்கூடியது. விலை 0—8—0

(4) சுண்ணம் 155ம் அதன் சூஸ்திரம் 55ம் சேர்ந்தது இதில் சுண்ணஞ் செயவதற்கு ஆதாரமான கருவிகளுங் கைபாகமும் சொல்லக் கூடியது. விலை 0—7—0

(5) செந்தூரம் 300 இதில் பாஷாணங்களையும் லோகங்களையுஞ் செந்தூரஞ்செப்வதற்கு முறைசொல்லக் கூடியது. விலை 0—8—0

(6) செந்தூர சூஸ்திரம் 155ம் அதன்சூஸ்திரம் 50ம் சேர்ந்தது இதில் லோகத்திலுஞ் சரக்குகளிலுஞ் செம்பெடுக்கு முறைகளும் அதில் வகாரஞ் செய்யக்கூடிய துறையுஞ் சொல்லியது. விலை 0—7—0

(7) வாதவைத்தியகளங்கு 300 இதில் சுண்ணச் செந்தூரஞ் செய்வதற்கு வகாரந்திற்குக்கொண்டு வருவதற்கும் சரக்குகளிலும், லோகங்களிலும் களங்கெடுக்கக்கூடிய முறைகளைச் சொல்லக்கூடியது. 0—8—0

(8) பஞ்சமித்திரம் 300 இதில் வைத்தியங்கள் வாதங்கள் செய்பவர்கள் பாஷாணங்களையும் லோகங்களையும் உப்புகளாற் பஞ்சமித்திரஞ் செய்து சுண்ணச்செந்தூரத்திற்கு கொண்டுவரக்கூடிய முறைகளைச்சொல்லக்கூடியது. விலை 0—8—0

(9) வைத்தியவாதசூஸ்திரம் 400 இதில் வாதங்கள் செய்யவேண்டிய முறைகளும் வைத்தியமுறைகளுஞ் சொல்லக்கூடியது. விலை 0—12—0

(10) வைத்தியம் 300 இதில் பாஷாணச்சரக்குகள் விஷச்சரக்குகள் சுத்திசெய்ய வேண்டிய முறையும் நாடிநிதானமும் வைத்தியத்திற்கனுப்பானங்களும் கஷாயவர்க்கங்களும் சொல்லக்கூடியது. விலை 0—8—0

(11) தண்டகம் 110ம் மேற்சொன்ன பாஷாணங்களுக்கும் லோகங்களுக்கும் இடைபாகம் செய்பாகஞ் சொல்லக்கூடியதும் இடைபாகம் 16ம் செய்பாகம் 16ம் வைத்தியங்களுக்கு சூஸ்திரம் 50தும் ஆகச்சாஸ்திரம் நான்குஞ் சேர்ந்தது. விலை 0—7—0

(12) வைத்தியக் கல்லாட மூலமும் உரையும் மேற்சொல்லிய சாஸ்திரங்களுக்கெல்லாம் அரும்பதவுரையும் வாத வைத்தியமுறையுஞ் சொல்லக்கூடியது விலை 0—12—0

உ

பரமபதி துணை.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

தமிழ்ச்சித்தவைத்திய

அகராதி.

ஐயா!

நீங்கள் வெகுகாலமாய் எதிர் பார்த்திருந்ததும் இதுவரை இதுபோல் எவரும இயற்றப்படாததும், சித்தவைததியர்களுக்கும் ஆயுர்வேத பண்டிதர்களுக்கும் மிக்க பயன்தரக்கூடியதும், பச்சிலை மூலிகைகள், கடைச்சரக்குகள், பாஷாணச்சரக்குகள், உபரசச் சரக்குகள், உப்புவகைகள் இவைகளுக்குச் சத்துருமித்துருவிபரமும் மூலிகைகளின தொகையகராதியுடன் சுமார் இருபதினாயிரஞ் சொற்கள் நிறையப் பெற்றதும் கண்டுகொள்ள முடியாத பச்சிலைகளின் பரிபாஷைப் பெயர்களை எளிதில் உணர்த்தக்கூடியதும் சுமார் 300 பக்கங்கள் கொண்டதும், சென்னை கனம் திவான்பகதூர் ஆனரபில் மந்திரி ஆரோக்கியசாமி முதலியாரவர்கள் பார்த்துமகிழப் பெற்றதும், சென்னை மாகாண சித்தவைத்திய சங்கமெம்பர்களாற் புகழப்பெற்றதும், ஷை சங்க அமைச்சர் மறைத்திருவன், சுவாமி விருதை. சிவஞானயோகி அவர்கள், எழுதியமுகவுரையுடன் அவர்களாற் பார்வையிடப்பெற்றதும், என்னால் திரட்டப்பெற்றதுமான "தமிழ்ச்சித்த வைத்திய அகராதி" வெளிவந்து விட்டது.

ஆகையால் ஷை அகராதியை ஒருதரம்வாங்கிப்படித்து அதன் உண்மையை அறிந்து பயனடைவீர்களாக.

ஷை அகராதி சுத்தப்பதிப்பாய் அச்சிடப் பெற்று கலிக்கோ பைண்டு செய்து விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. விலை ரூ 2-0-0

இன்னும் அநேக வைத்றிய புத்தகங்களும் மற்ற இதர புத்தகங்களும் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி வி.பி.யிலும் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு

இ. ராம. குருசாமிக் கோன்,

புக்ஷாப், புதுமண்டபம்

மதுரை.